REGD 1642 M

சந்தா விபரம்
1 ஆண்டு ரூ 7.
½ ,, 3 8 0

16 பக்கம்
விலை
இரண்டணா

திராவிடநாடு

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 26-3-50 | இதழ் 39



மறுமலர்ச்சி எழுத்தாளர்

[தங்கவேலர்]

பொருந்தா மணம்!

பட்டம், பதவியே தன் வாழ்க்கையின் குறிக்கோளென எண்ணி வாழ்ந்தவனுக்கு அவளைத் திருமணம் செய்து தந்தனர். அவன் வயது முதிர்ந்தவன் — அவளோ இளமையின் செல்வி! கொழுந்து விட்டெரியும் அவளது ஆசைத்தீயை அவனால் அணைக்க முடியவில்லை — அவள் பார்வை வேறு திசைக்குத் திரும்பியது. ஒரு ஆணழகன், அவள் இதயத்தில் அமர்ந்தான். இருவரும் நிலவும் வானும் ஆகிவிட்டனர்!

ஒருநாள், அந்தக் குமரியின் 'திருட்டு வாழ்வை' அவள் சொந்தக் கணவன் கண்டுவிடுகிறான்—கண்டிக்கிறான், "காதகி! பாதகி! படுபாவி!" என்ற சிறுஞ்சொற்களுடன்! முடிவு காதல் புறாக்கள் இரண்டும் கட்டுப்பாடு எனும் கூண்டைவிட்டுத் தப்புகின்றன — வேற்றிடம் செல்கின்றனர்.

நாட்கள் பல மறைந்தன. நிலவும் வானுமாக இருந்த கள்ளக் காதலர்களிடையே குமுறல் எழும்புகிறது. காதலன்—பூமியாகி விடுகிறான், நிலவான அவளைப் புறக்கணிக்கிறான்! வேறு ஜோடியைப் பார்க்கத் தலைப்படுகிறான்.

வாழ்க்கையில் ஏமாற்றமடைந்த அவள் புழுப்போலத் துடிக்கிறாள். கடைசியில அவளது வாழ்வு முடிகிறது — அவளே முடித்துக்கொள்கிறாள்!

சிந்தனையைத் தூண்டிவிடும் "அன்னா காரீனா" கதை இது. மனம் ஒன்றுபடாத மணத்தினால் ஏற்படும் கேடுகளை அக்கதையில் அவர் சித்தரித்திருக்கிறார் — இல்லை! பாலைவனத்தில் விரட்டப்பட்ட அந்த இளங்குமரியின் உணர்ச்சி அலைகளை அப்படியே படம் பிடித்துள்ளார், டால்ஸ்டாய்

X X X

சர்வாதிகாரம் செய்த ஜார் வாழ்ந்த ருஷ்ய நாட்டில்தான் உலகப் புகழ்பெற்ற மறுமலர்ச்சி எழுத்தாளர் 'டால்ஸ்டாய்' தோன்றினார். ஜார் கால ருஷ்யாவிலே ஜனநாயகம் மதிக்கப்பட்ட நிலையும், சீமான்களின் அட்டகாசமும், அந்த அட்டகாசத்துக்கு அடிபணிந்த பெரும் பகுதி மக்களின் போக்கும் டால்ஸ்டாயை புது மனிதனாக்கியது!

டால்ஸ்டாயும் சீமான்தான். அவர் விரும்பியிருந்தால், மற்றச் சீமான்களைப்போல சிங்கார வாழ்வு நடத்தியிருக்கமுடியும் — ஆனால் அவர் இந்தமுறையை அடியோடு வெறுத்து இலட்சிய வாழ்வு நடத்த விரும்பினார்.

இந்த எண்ணங்கொண்டேதான் 8 இலட்ச ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்புள்ள நிலத்தில தமக்கிருந்த சொந்த உரிமையைத் துறந்தார். நிலத்தில தமக்கிருந்த உரிமையைத் துறந்து விளக்கம் தந்தபோது, "தேவைக்கு அதிகமான நிலம் ஒருவரிடமிருப்பதால் பலர் அடிமைகளாக வாழவேண்டியிருக்கிறது. ஆகவேதான் எனக்குச் சொந்தமுள்ள ஏராளமான நிலங்களைத் துறக்கிறேன்" என்று கூறினார். ஆனால், அவரின் இந்த விளக்கம் டால்ஸ்டாயின் குடும்பத்தினருக்கு சமாதானத்தை அளிக்கவில்லை.

பரம்பரைச் செல்வர் குடும்பத்தில் வளர்ந்த டால்ஸ்டாயின் மனைவியும், செல்வச் சீமானாக வாழவேண்டுமென எண்ணங்கொண்ட அவரது குமாரர்களும் டால்ஸ்டாயின் இந்தப் போக்கை வெறுத்தனர்.

தன்னிடமிருந்த ஏராளமான நிலங்களை ஏழைகளுக்குப் பகிர்ந்தளித்துவிட்டு மாளிகை வாசத்தை மறந்து—மண் குடிசையிலே தானும் ஒரு ஏழைபோல வாழ்க்கை நடத்துவது டால்ஸ்டாயின் மனைவிக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை!

இதுபோலவே தன் மனைவியின் ஆடம்பரத்தை விரும்பும் போக்கும் —தன்னை அடிக்கடி பணம் சம்பாதிக்கும்படி தூண்டிக் கொண்டிருந்த முறையும் டால்ஸ்டாய்க்குப் பிடிக்கவில்லை!

இந்த இடத்திலிருந்துதான் டால்ஸ்டாயின் குடும்பத்தில் துவேஷப் புயல் தலைநீட்ட ஆரம்பித்தது.

இந்த நிலையை ஒருவாறு சமாளித்துக்கொண்டு தன இலட்சிய வாழ்வைத் துவக்கத் திட்டமிட்டார். அப்போதைய ரஷ்ய மக்களின் சமூகத்தில் தாண்டவமாடிய தீமைகள் டால்ஸ்டாயின் உள்ளத்தைப் பெரிதும் வாட்டின. இந்த இழிநிலை மாற அவர் பல ஏடுகள் எழுதி வெளியிட்டார். அதுவரை நோயாளியாக இருந்த ருஷ்ய சமூகத்துக்கு டால்ஸ்டாயின் புத்தகங்கள் நல்லதொரு மருந்தாக அமைந்தன! அந்தப் புத்தகங்கள் ருஷ்யாவுக்கு மட்டுமல்ல, உலக சமுதாயத்துக்கே நல்வழி காட்டத் தோன்றிய இலக்கிய நூல்களாக உயர்ந்த முறையில் மதிக்கப்படுகின்றன.

டால்ஸ்டாய் வாழ்ந்த ருஷ்யாவிலே பெருகிவந்த பொருந்தா மணக் கொடுமையைத் தடுக்க "அன்னாகாரீனா" (Annakarenia) என்ற பிரச்சார ஏடு எழுதி வெளியிட்டார்.

'அன்னாகாரீனா', எவ்வளவு உயரிய முறையில் மக்கள் மன்றத்தில் மதிக்கப்பட்டதோ அதுபோலவேதான் அவர் எழுதிய "போரும் அமைதியும்", "புனர் ஜன்மம்", "இனி நாம் செய்யவேண்டியது யாது", என்பவைபோன்ற நாவல்களும், நாடகங்களும் இன்றைய இலக்கிய உலகிலே தனி இடம் பெற்றிருக்கின்றன.

மக்களுக்குச் சிந்திக்கும் ஆற்றலை உண்டாக்கப் பல சிறந்த சிந்தனை நூல்களை எழுதி அந்த நூல்களுக்குள்ளேயே சீர்திருத்தக் கருத்துக்களைப் புகுத்தினார். எட்டளவிலே சீர்திருத்தத்தைப் புகுத்திவிட்டுத்

தன் நடத்தையை வேறு முறையில் அமைத்துக் கொண்டவரல்ல டால்ஸ்டாய்!

தான் எந்தச் சமூகத்தைக் காண வேண்டுமென்று இரவு பகல் பாராது கண்விழித்து ஏடு பல தீட்டினாரோ—அந்தப் புதிய சமூகத்துக்குச் செல்லும் மக்களுக்கு, தன் நடத்தை, தான் மேற்கொண்டுள்ள வாழ்வுப் பாதை—அவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டுமென்று அவர் எண்ணினார். அதன்படியே தன் வாழ்வுப் பாதையையும் அமைத்துக் கொண்டார்.

"ஒவ்வொருவரும் தன் தேவைகளைத் தன் உழைப்பினாலே பூர்த்தி செய்துகொள்ளவேண்டும். தொழில்களில் உயர்வு தாழ்வு இல்லை" என்று டாலஸ்டாய் உபதேசம் செய்ததோடு நிற்கவில்லை, தொழிலிலே இழிவு இல்லை என்பதை நடைமுறையில் காட்டத் தானே ஒரு சமயம் சக்கிலித் தொழிலை மேற்கொண்டு பணியாற்றினார்.

ஆம்! டால்ஸ்டாய்தான்! 8 இலட்ச ரூபாய் மதிப்புள்ள நிலத்தைத் தன் வசம் வைத்திருந்த டால்ஸ்டாய், தான் ஏழையாக வாழ்ந்து சக்கிலித் தொழிலை மேற்கொண்டிருந்தார்.

'கார்ல் மார்க்ஸ்' தோன்றிச்சமதர்மத்தை மக்களுக்குப் புகட்டுவதற்கு முன்பே டால்ஸ்டாய் தன் நடத்தையின் மூலமாகவும், பிரச்சாரத்தின் மூலமாகவும் சமதர்மத்தைப் படிப்படியாகப் பரப்பி வந்தார்.

ஏழையின் தோழனாக, பாட்டாளியின் கூட்டாளியாக இருந்த டால்ஸ்டாய், தன் அறையைத் தானே சுத்தம் செய்துகொள்வார். இந்தப் பணியை மேற்கொள்ள அவர் மகளோ அல்லது வேறு யாரோ முன் வந்தாலும் அவர் மறுத்துத் தடுத்துவிடுவார். நேர்த்தியான வேலைப்பாடமைந்த தட்டுகளை நீக்கிவிட்டு, சாதாரண மரத் தட்டுகளிலேயே உணவருந்தினார்.

வாலிப பருவத்திலே டால்ஸ்டாய் செய்யாத குற்றங்கள் பாக்கியில்லை. இதற்கெல்லாம் பிராயச்சித்தமாகத்தான், தன் வாலிபம்மாறும் பருவத்தில் இலட்சியவாழ்வு வாழ எண்ணினார். ஆனால், இந்த இலட்சிய வாழ்வு நடத்துவதற்குத் தன் கணவனுக்கு உதவி செய்யாதது மட்டுமல்ல...... பலவழிகளில் தொல்லை கொடுத்து வந்தாள் திருமதி டால்ஸ்டாய்! டால்ஸ்டாய் தனக்கு அழகான மனைவி வேண்டுமென்று விரும்பவில்லை, தன் மனப்போக்கை அறிந்து நடந்துகொள்ளும் மனைவியைத் தான் அவர் விரும்பினார். ஆனால் திருமதி டால்ஸ்டாய் அந்தப் பண்பு பெற்றவராக இல்லை. தன் கணவன் தன் மனப்போக்கையறிந்து அதன்படி பணியாற்ற வேண்டியவராக இருக்கவேண்டுமென்று திருமதி டால்ஸ்டாய் விரும்பினார்.

இருவாது கருத்துக்களும் பெரிதும் வேறுபட்டிருந்தன. இலட்சிய வாழ்வு வாழ டால்ஸ்டாய் தன் வசமிருந்த நிலங்களை ஏழைகளுக்குப் பகிர்ந்தளித்தபோது தான் அவரது துணைவியாரின் எதிர்ப்பு உச்சநிலையடைந்தது! அப்போது டால்ஸ்டாய்க்கு வயது 63.

அதற்குப் பிறகு 19 ஆண்டுகள் வரை அதாவது 83-வயது வரை, தன்னைச் சூழ்ந்திருந்தவர்களின் ஆடம்பர நிலையையும் தன் வாழ்க்கைத் தோழியரின் ஓயாத தொல்லையையும் தாங்கிவந்தார். இனியும் இதுமாதிரி முறையைத் தன்னால் தாங்க முடியாது என்ற நிலை ஏற்படவே, தொல்லை தந்த தன் மனைவி, தன்னைக் குபேரனாக்கவில்லையெனத் தம்மீது குரோதங்கொண்ட அவர் குமாரர்கள், தான் அன்போடு அடிக்கடி அழைத்துவந்த தன் பிரிய மகள் 'அலக்சாண்ட்ரா' ஆகியோரிடமிருந்து பிரிந்து தனது 83வது, வயதில் 'யாஸ்னயா போல்யானா' என்ற தமது ஏகபோக கிராமத்தின் மாளிகையைத் துறந்து வெளியேறினார்.

பல இலட்சரூபாய்களைத் துறந்து, யாஸ்னயா போல்யானாவில் இலட்சிய வாழ்வு நடத்த எண்ணினார். அந்த இடமும் அவருக்கு அமைதியை அளிக்கவில்லை. ஆகவே யாஸ்னயா போல்யானாவையும் விட்டு வெளியேறிவிட்டார்.

டால்ஸ்டாய் தன் வீட்டைவிட்டு வெளியேறுவதற்கு முன்பு "ஸாஷா" என்ற அன்புப் பெயரிலே அழைக்கும் அலக்சாண்ட்ரா என்ற தன் மகளை அழைத்து, அவர் அடுக்கடுக்காக எழுதிக் குவித்திருந்த அச்சாகாத நூல்களை அவளிடம் காட்டி பத்திரமாகவைத்துக்கொள்ளும்படி கூறிச் சென்றார்! அலக்சாண்ட்ரா அந்தக் காகிதக் கட்டுகளைப் பத்திரமாக வைக்காதிருந்தால், இப்போது ருஷ்ய அரசாங்கம் டால்ஸ்டாய் எழுதிய ஒவ்வொரு சிறு வார்த்தையையுங்கூட அச்சில் வார்த்து அகமகிழும் நிலை ஏற்பட்டிருக்காது.

"நான் வெளியேறப் போகிறேன்" என்று டால்ஸ்டாய் கூறியதுமே, அலெக்சாண்ட்ரா உள்ளமுடைந்து போனாள். ஆனால் 83-வது வயதிலே தடுக்க முடியாத முறையிலே தன் வீட்டைவிட்டு வெளியேறும் டால்ஸ்டாய்க்குத் துணையாக வைத்திய நண்பர் 'துவஷன்' என்பவரும் கூடச் செல்கிறார் என்பதை அறிந்து சிறிது தேறினாள்.

டால்ஸ்டாய் சிக்கனத்தில் மிக்க கண்டிப்பானவர். அதிலும் மனித உழைப்பின் பயனை வீணாக்குவது எப்பொழுதுமே அவருக்குப் பிடிக்காததொன்று.

டால்ஸ்டாய் தன் யாஸ்னயாபோல்யானாவைவிட்டு வெளியேறும்போது—நல்ல இருட்டு. அவரை வழியனுப்ப மகள் அலக்சாண்ட்ராவும், பணிப்பெண்ணொருத்தியும் ஒரு பெரிய பெட்டியைத்தூக்கிக்கொண்டு நடந்துகொண்டிருந்தனர். இருட்டிலே மெதுவாக ஊர்ந்து ஊர்ந்து நடந்தனர். இதைக் கண்ட டால்ஸ்டாய் அவர்களுக்கு நன்றாய் வழி தெரியும் பொருட்டு தன் கையிலிருந்த மின்சார விளக்கை அழுத்தி வெளிச்சம் காட்டுவதும், உடனே அணைப்பதுமாகச் சிக்கன முறையைக்கையாண்டு வழி காட்டிக் கொண்டு சென்றாராம்!

இதனால் வழி துலங்குவதற்குப் பதிலாக இருட்டுக்கும் இருட்டாகத் தோன்றிற்றும். இதுமாதிரி சிறு விஷயங்களிலும் டால்ஸ்டாய் சிக்கனத்தைக் கையாள்வதில் அசிரத்தை கொண்டு விடவில்லை.

X X X

ருஷியாவின் விடுதலைப் போர் வீரன் லெனின் தன்னைப் புகழ்ந்து பேசும் அளவுக்குப்பெருமை பெற்ற எழுத்தாளர் டால்ஸ்டாய்.

ஒரு சமயம் டால்ஸ்டாய் தீட்டிய "போரும் அமைதியும்" என்ற ஏடு, லெனின் மேஜையிலே விரிந்துகிடந்தது! மேஜையின் முன் லெனின்

அமர்ந்து, தன் நண்பருக்கு ஏதோ கடிதம் எழுதிக்கொண்டிருந்தார். அந்தச்சமயம் ருஷ்ய அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு ஆளாகிக்கொண்டிருந்த எழுத்தாளர் 'மாக்ஸிம் கார்க்கி' லெனின் அறைக்குள்ளே நுழைந்தார். கார்க்கியின் கண்கள் மேஜையில் கிடந்த டால்ஸ்டாயின் "போரும் அமைதி"யைச் சுற்றியே வட்டமிட்டன. இதைக்கண்ட லெனின் "போரும் அமைதி"யைச் சுட்டிக்காட்டிக்கொண்டு, "அதில் வேட்டைப் பகுதியை மீண்டும் வாசிக்க விரும்பினேன். உடனே தோழர் ஒருவருக்குக் கடிதம் எழுத வேண்டுமென்பது நினைவுக்கு வந்தது. படிப்பதற்கு நேரமே கிட்டுவதில்லை. நேற்றிரவுதான் டால்ஸ்டாயைப் பற்றிய உமது கட்டுரையைப் படிக்க முடிந்தது!" என்று கூறிச் சிரித்துக்கொண்டே டால்ஸ்டாயைப் பற்றி, "ஆஹா! என்ன மனிதன்! மனிதனா? கலைஞனைக் காணவேண்டுமென்றால் இங்கே இருக்கிறான். மேலும் ஆச்சரியமான செய்தி தெரியுமா? இந்தப் பிரபு கிளம்பியதற்கு முன், உண்மையான பிரபு எவனும் நூலாசிரியனானதில்லை" என்று கார்க்கியிடம் கூறினாராம்.

லெனின் சாதாரணமாக யாரையுமே புகழ்ந்து பேசிவிடுபவரல்ல. லெனின் ஒருசமயம் தன் நண்பரொருவரின் மாடியிலே நடந்த இசைக் கச்சேரிக்குச்சென்றிருந்தார். அங்கு பாடிய இசையைக்குறித்து லெனின் தன் கருத்தைக் கூறியபோது "இசையைக் குறித்துப் பெருமிதம் எய்துகிறேன்" என்று சொல்லிவிட்டு, அடுத்த நிமிடமே பிறரைத் தட்டிக்கொடுத்துப் புகழ்ந்துபேசப் படுபவர், தட்டிக்கொடுக்கும் நம் கரத்தைக் கடித்துவிடுகின்றனர் என்று எடுத்துக்காட்டிச் சாதாரணமாக யாரையும் புகழ்ந்து பேசிவிடுவதால் ஏற்படக்கூடிய நிலைமையை விளக்கினார்...இப்படிப்பட்ட எண்ணங்கள் அலைமோதும் உள்ளங்கொண்ட லெனின், டால்ஸ்டாயின் ஏடுகளை பலமுறை படித்தும், அவரைப்புகழ்ந்தும் பேசியதன்காரணம் —டால்ஸ்டாயின் எழுத்துவன்மைதான்.

டால்ஸ்டாயின் முழுப் பெயர் 'லியோ நிகோலவிச்' என்பது. அவர் 1828ம் ஆண்டு பிறந்து — 1910ம் ஆண்டு இறந்தார்; அதாவது 82— வயதுவரை வாழ்ந்தார்.

தனது 'யாஸ்னயா போல்யானா'வைவிட்டு வெளியேறிய பதினொரு நாட்கள் கழித்து, ஒரு புகைவண்டி நிலையத்தில் நிமோனியா வியாதியால் டால்ஸ்டாய் உயிர் துறந்தார்.

* * *

நெஞ்சையள்ளும் டால்ஸ்டாயின் எழுத்தோவியங்களைவிட — அவர் வாழ்ந்த வாழ்க்கை ஒரு பெரிய காவியமாக உலக இலக்கிய மேதைகளால் கருதப்படுகிறது!

மணப் போர்

15-ம் பக்கத் தொடர்ச்சி

ஆபிடியூபா ஒரு இடத்தில் சொல்லியுள்ளார், இந்தியநாட்டில் எந்தச் சிறு செயலும், நடவடிக்கையும், மதத் தொடர்பற்றிருப்பதில்லையென்று! அது அணுவுக்கு அணு உண்மை. ஒன்றைச் செய்யாதே என்று அவர்கள் நேரடியாகச் சொல்லப் பயந்தார்கள். இதைச்செய்தால் இந்தவிளைவு ஏற்படும் என்று காட்டினார்கள். விளக்கைத் தொடாதே என்று சொன்னால் குழந்தைகள் கேட்பதில்லை. தொட்டால் சுடுபுண்ணுண்டாகிவிடும் என்று கொப்பளக்கொடுமையைச் சொன்னால் அஞ்சுகிறார்கள்! மக்கள் உள்ளமும் அப்படியென்றே கணக்குப் போட்டார்கள். அதுபோலவே இதைச்செய் என்று கட்டளையிட நினைக்கவில்லை. இதைச் செய்தால் அதனால் உனக்கு இன்னது கிடைக்கும் என்று ஆசைகாட்டினார்கள். குளிக்கவும் உண்ணவும் மறந்து அடம்பிடிக்கும்குழந்தைக்கு, திருவிழாவுக்கு அழைத்துப் போவேன், படக்காட்சி காட்டுவேன், பொம்மை வாங்கித்தருவேன் என்று சொல்லிடும்தாயைப்போலவே நடந்துகொண்டார்கள். ஆகவே தவறைத்திருத்த அந்தப்பாயாசம் பூசப்பட்ட வார்த்தை பயன்படுத்தப் படுவதை எதிர்க்கவில்லை. அதற்காக அறியாமையைப் பெருக்குவானேன்?

(தொடரும்)

சண்டை அவசியமா?

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

தங்கள் நாட்டிலுள்ள இந்துக்கள் அனைவரும் இந்தியாவின் உளவாளிகள் என்று பாகிஸ்தான் மதவெறியர்கள் எண்ண ஆரம்பித்தனர். தங்கள் தங்கள் நாடு பிரியும்போது முடிந்தவரை பெரியதான எல்லைக் கோடுகளைப்போட முயற்சிசெய்தனர் இருவகுப்பினரும். பலன் பஞ்சாப், வங்கம் இரண்டும் குழப்பமயமாயிற்று. ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியாக்கப்பட்டன. இருஅரசாங்கங்களுக்கும் ஆரம்பத்திலேயே பலமான சேதம். தீர்க்கமுடியாத அகதிப் பிரச்னை தலை தூக்கியது. இதைத் தொடர்ந்து தனித்தியங்கிய ராஜாங்கங்கள் யாருடன் சேருவது என்ற பிரச்னை எழுந்தது. ஹைதராபாத், ஜுனகாத், பிரச்னைகள் இரு அரசாங்கங்களையும் எதிருக்கெதிரான முகாமில் கொண்டுபோய்த் தள்ளின. காஷ்மீர் பிரச்னை மறைமுகமான போரில் கொண்டுபோய் விட்டது. நாணயமதிப்புக் குறைப்பு பொருளாதார இருட்டடைப்பில் தள்ளிவிட்டது. இந்த எதிர்பாராத நிகழ்ச்சிகள் இரு நாடுகளிலுமுள்ள வகுப்பு வெறியர்களுக்கு நல்ல சந்தர்ப்பத்தை அளித்துவிட்டன. இரு அரசாங்கங்களும் விரும்பியோ விரும்பாமலோ, நிலைமை விபரீதமாக்கப்பட்டு, இரு அரசாங்கங்களும் ஆபத்தில் கொண்டுவந்துவிடப் பட்டுள்ளன.

* * *

தூரம் மாத்திரமல்ல, பண்பா கூட வட இந்தியர் எட்டிப் பிடிக் முடியாத இடத்தில் தெற்கு இருக்கும் காரணத்தினால்தான், திராவிட இந்த வகுப்புக் கலவரத்திலிருந் தப்பித்துக்கொண்டிருக்கிறத ஆனால், வடக்கே வகுப்புப் பிரச்ன இன்று அகோரத் தாண்டவ ஆடுகிறது.

இன்று வங்கத்தில் ஏற்பட்டுள்ள கலவரத்திற்கு மேற்குறிப்பிட் காரணங்கள்தான் அடிப்படை ஆனால், அவைகளோடு கூட மற்று சில காரணங்களும் இருக்கின்றன பொருளாதார முறைப்படி பார் தால் கிழக்கு வங்காளம் மிகவு தாழ்ந்த நிலையிலிருக்கிறது. சண ஒன்றுதான் கி. வங்கத்தின் முக்

விளை பொருள். அங்கு விளையும் அவ்வளவு சணலும் மேற்கு வங்கத்திலுள்ள ஆலைகளில்தான் பொருள்களாக மாற்றப்படும். ஆகவே மேற்கு வங்கத்திலுள்ள ஆலைகள் சுழல, கிழக்குவங்கம் கச்சாச் சணலைகொடுத்தாக வேண்டும். பொருளாதார தத்துவப்படி மேற்கு கிழக்கு வங்கங்களின் நல்வாழ்வு ஒன்றையொன்று சார்ந்து நிற்கிறது. இந்தச் சூழ்நிலையில், நாணய மதிப்புக் குறைப்பில் இந்தியாவுடன் ஒத்துப்போகப் பாகிஸ்தான் மறுத்ததின் காரணமாக, பெரியதொரு மாற்றம் ஏற்பட்டது. நூறு ரூபாய்க்குவாங்கிவந்த கச்சாச்சணலை நூற்று நாற்பது ரூபாய்க்கு வாங்க மேற்கு வங்காளம் மறுத்தது. பலன், கிழக்கு வங்காளத்தில் சணல் தேங்க ஆரம்பித்தது. வியாபாரம் தடைப்பட்டது. கிழக்கு வங்கத்தில் விவசாயிகள் வியாபாரத்தடையால் அவதியுற்றனர். மேற்கு வங்கத்தில் இயந்திரம் சுழலாத காரணத்தால் வறுமை தொழிலாளர்களைப் பிடிக்கத்தொடங்கியது. பலநூறு மைல்களுக்கப்பால் கராச்சியிலே உட்கார்ந்துகொண்டு, பாக் அரசாங்கத்தார் உண்மை நிலையை உணர்ந்து தேவையானவற்றைச் செய்ய முடியவில்லை. தங்களோடு ஒத்துவராத பாகிஸ்தானுடன் என்னசெய்வது என்று புரியாமல், டில்லி அரசாங்கம் பத்திரிகை யறிக்கைகளோடு நின்று விட்டது. மொத்தத்தில் வங்கமக்கள் பட்டினியால் வாட ஆரம்பித்தனர். தங்கள் இழிநிலைக்கு யார் காரணம் என்று அவர்களுக்குப்புரியவில்லை. பசி அவர்கள் காதைமாத்திரம் அடைக்கவில்லை, புத்தியையும் மறைத்து விட்டது.

சரியான நேரத்தில் வகுப்பு வெறியர்கள் தூபத்தைப் போட்டு விட்டனர். முடிவு, ஆபத்தானவகுப்புக்கலவரம். சென்ற ஒரு மாதமாக வங்கம் இரத்தக் களரியிலிருக்கிறது. கல்கத்தாவிற்கும் டாக்காவிற்கும் இடையே அகதிகள் நடந்தவண்ணமிருக்கின்றனர். இந்த நிலைமை நீடிக்க விடுவது அறிவிலிகளைத் தவிர வேறெவரும் விரும்பாத காரியம். ஆகவே அறிவுள்ளவர்கள் என்ன செய்வது?

இந்தக் கேள்விக்குத்தான் "சண்டை அவசியம்" என்ற பதிலை இந்து வகுப்பு வாதிகள் தருகின்றனர். தீர்க்கமான ஆலோசனையின்றி இவர்களோடு சேர்ந்து கொண்டு சமதர்மக் கட்சியும் பாகிஸ்தானுடன் போர் தொடுக்கும் படலத்தை ஆரம்பிக்க ஆர்ப்பரிக்கிறது. இது சமதர்மம் என்ற பெயருக்கே இழுக்கு.

சமதர்மக்கட்சியின் தீர்மானம் விசித்திரமாக இருக்கிறது. இவர்கள் கூறுகிறபடி பாகிஸ்தானுடன் நேரு சர்க்கார் சண்டைக்குப் போனால் என்னநடக்கும்? ஒருவேளை பிரிட்டிஷ்காரன் வைத்துவிட்டுப் போன அருமையான இந்தியப்படை சுலபமாகப் பாகிஸ்தானை வென்று விடலாம். மறுபடியும் ஐக்கிய இந்தியாவாக மாற்றப்பட்டு விடும். பிறகு? இந்து—முஸ்லீம் பிரச்னை அப்பொழுது தீர்ந்து விடுமா?

ஒன்றாக இருந்து குடித்தனம் செய்ய முடியாமல் பிரிந்து போன குடும்பர், ஒன்றையொன்று அடிமைப் படுத்திக் கொண்டு அதிகார மிரட்டலில் எத்தனை நாளைக்கு ஒன்றாக வாழ முடியும்.

மறுபடியும் ஒரு ஜின்னா தோன்றாமலிருக்க என்ன தடை? பாகிஸ்தானை ஒழித்தால் மாத்திரம் வகுப்புப் பிரச்னையைத் தீர்த்து விடலாம் என்று சமதர்மக்கட்சி நினைத்தால், அது சுத்தப் பைத்யக்காரத்தனம்; அரசியல் அ[illegible] சரியாகப் புரியவில்லை என்றுதான் பொருள். தற்காலிகமாக முஸ்லீம்களின் மேல் வெறுப்புற்றிருக்கும் வட இந்திய இந்துக்களுக்கிடையில், குறிப்பாக மேற்கு வங்க இந்துக்களிடையில் சமதர்மக் கட்சிக்குச் செல்வாக்கு ஏற்படலாமே தவிர, மனித சமுதாயத்திற்கு வேறெந்தப் பலனும் ஏற்பட முடியாது. முன்னேற்றச் சக்திகளுக்கு ஒரு இழுக்கைத் தேடுகிறது சமதர்மக் கட்சி. 'சண்டை அவசியம்' என்பது தற்கொலைக் கொள்கை. வங்கத்திலிருந்து வகுப்புக் கலவரத்தை, விரட்ட அந்த எண்ணமே முதலில் வேரறுக்கப்படவேண்டும். இருநாடுகளும் ஒன்றையொன்று நம்பிச் சமாதான முறையில் இந்தப் பிரச்னையை கவனிக்க ஆரம்பித்தால் தான், ஏதாவது பலனை எதிர்பார்க்கலாம்.

இருநாடுகளிலும், குறிப்பாகப் பாகிஸ்தானில் சிறுபான்மையினரின் நலத்தை எந்த அரசியல் கட்சியும் காப்பாற்றமுடியாது. முஸ்லிம்லீக் இனிமேல் இருப்பது மதச்சார்பற்ற அரசாங்கத்தையுடைய (?) இந்தியாவுக்கு அடுக்காது என்று காங்கிரஸ் தலைவர்கள் இந்தியாவில் முழங்குகின்றனர். அதேமாதிரி இஸ்லாமியரின் தனி ராஜ்யத்தில் காங்கிரஸ் என்று இந்து ஸ்தாபனம் இருப்பது பொறுக்கமுடியாதது என்று பாகிஸ்தான் லீகர்கள் முழங்கி வருகின்றனர். ஆகவே, சிறுபான்மையினர் தனிக்கட்சிகளை அமைக்க நேரிட்டால் அது வகுப்புவாதக்கட்சியாகவே இருக்கும். அந்தக் கட்சிகளால் ஜனநாயக ரீதியில் எந்தநன்மையும்செய்ய முடியாது. ஏனென்றால் இருநாட்டிலும் பெரும்பான்மையினரின் விருப்பப்படிதான் எந்தக்காரியமும் நடக்கிறதே தவிர, ஜனநாயக ரீதியில் நடக்கவில்லை. இப்பொழுதிருக்கின்ற நிலையில் அதிகாரபூர்வமாக இந்தியா--பாகிஸ்தான் இரண்டு நாடுகளும் தங்கள் தங்கள் நாட்டிலுள்ள சிறுபான்மையினரை நடத்தும் விதத்தைபற்றி நல்லமுடிவுக்குவரவேண்டும். வகுப்புக்கலவரம்தீர்க்கமுடியாத அளவுக்குப் புரையோடி விட்டிருந்தால் சரியான திட்டம் தீட்டிக், கூடுமானவரை ஜனத்தொகை மாற்றம் செய்யலாம், வங்கத்திற்கு இவைகள் அவசரமாகத்தேவை. மனவருத்தத்துடன் மேற்கு வங்கத்தில் இந்துக்களிருக்கவேண்டியதில்லை. அதேமாதிரி கிழக்கு வங்கத்தில் முஸ்லீம்கள் இருக்கவேண்டாம். ஏதாவதுஒரு நல்ல முடிவு வேண்டும். உடனேவேண்டும், மக்கள் காட்டுமிராண்டிக்காலத்தில் நடந்து கொண்டதைப்போல இருபதாவது நூற்றாண்டிலும் நடக்கக்கூடாதுஎன்றுஎண்ணினால். கலகம் ஏற்பட்டதின் காரணமாகக் கிழக்கு, மேற்கு வங்கத்தில் பலதொழிற் சாலைகள் மூடப்பட்டுவிட்டனவாம். டன்லப் டயர் கம்பெனி, பல சணல் தொழிற்சாலைகள் முதலிய பெரும் தொழில்ஸ்தாபனங்கள் கதவடைப்புச் செய்துள்ளன அதனால் மேலும்பல லட்சம் தொழிலாளர்கள் வேலையின்றித் தவிக்க விடப்பட்டுள்ளனர். ஆகவேநிலைமை இன்னும் எப்படியெல்லாம்மாறும் என்று கூறமுடியவில்லை. வங்கத்தின் வருங்காலம் பயத்தைக் கொடுக்கிறது. எந்த நேரத்திலும் எப்படிப்பட்ட நிகழ்ச்சியும் ஏற்படலாம்.

இந்திய உபகண்டத்து அரசியல் வாதிகள் இனியாவது இந்தப் பிரச்னையில் தங்கள் சிந்தனையைச் செலவிடுவார்களா? மதவெறி ஒழிக்கப்படுமா?

*

ஆச்சாரியாரின் ஆருடம் பலிக்காது

"எதிர்காலத்தில் சமஸ்கிருதத்திற்கு நல்ல மதிப்பு இருக்கும்" என்று அன்பர் ஆச்சாரியார் ஆருடம் கூறுகிறார். அதே சமயத்தில், தம்முடைய ஆருடம் ஒருவேளை பொய்த்து விடுமோ என்ற அச்சமும் அவருக்கு ஏற்பட்டு விட்டதாகத் தெரிகிறது. அதனால்தான், அவர், அனைவரையும் சமஸ்கிருதத்தைக் கற்கும்படி வற்புறுத்துகிறார். எல்லோரையும் சமஸ்கிருதத்தைப் படிக்கச் செய்வதன் வாயிலாகவாவது அதற்கு மதிப்பை உண்டாக்கலாம் என்று அவர் கருதுகிறார் போலும்! தம்முடைய 'அற்புதமான' ஆருடத்தை மக்கள் நம்பாது போனால் என்ன செய்வது என்ற ஏக்கமும் அவருக்கு உண்டாகிவிட்டது. உடனே ஒரு போடு போடுகிறார்,

"முன்காலத்தில் நம் நாட்டு அலுவல்களெல்லாம் சமஸ்கிருதத்திலேயே நடந்து வந்தன" என்று.

எந்தெந்த அலுவல்கள் அந்தக் காலத்தில் சமஸ்கிருதத்தில் நடந்து வந்தன என்பதற்கும் விபரம் கூறுகிறார், ஆச்சாரியார். தர்மசாஸ்திரம், சீர்திருத்தப் பிரச்சாரம், அரசாங்கமுறை, வியாபாரம் எல்லாம் சமஸ்கிருதத்திலேயே நடந்து வந்தது என்று கூறுகிறார். தர்மசாஸ்திரம், அரசாங்க முறை, வியாபாரம் ஆகியவை சமஸ்கிருதத்தில் நடைபெற்றன என்று கூறுவதோடுநின்று விடாமல் சீர்திருத்தப் பிரச்சாரமும் சமஸ்கிருதத்திலேயே நடைபெற்றது என்று நாக்கூசாது கூறுகிறார்.

சீர்திருத்தம்! இது எந்த வடிவத்தில் சமஸ்கிருதத்தால் செய்யப்பட்டதென்பதற்கு ஆச்சாரியார் விளக்கம் கூறவில்லை. என்றபோதிலும், சமஸ்கிருதம் செய்த சீர்திருத்தங்களிற் சிலவற்றைமட்டும் இங்கு குறிப்பிடுகிறோம்.

"வைதிக கருமமாயிருந்தாலும், லௌகிக கருமமாயிருந்தாலும் அக்னி எப்படி மேலான தெய்வமாயிருக்கிறதோ, அப்படியே பிராமணன் ஞானியாய் இருந்தபோதிலும் மூடனாய் இருந்தபோதிலும் அவனே மேலான தெய்வமாவான்."

ஒரு பிராமணன் அறிவாளியாக இருந்தாலும் அல்லது அடிமுட்டாளாக இருந்தாலும், அவனைக் கடவுளாகக்கொண்டு வழிபடவேண்டுமென்பது சமஸ்கிருதம் செய்த சீர்திருத்தங்களில் ஒன்றாகும். அறிவாளிக்கும் முட்டாளுக்கும் வேறுபாடு பார்க்கக்கூடாது — எவ்வளவு அருமையான சீர்திருத்தம்! இத்தகைய 'சிறந்த' சீர்திருத்தத்தைச் செய்யச் சமஸ்கிருதமல்லாத வேறு மொழிகளால் எப்படி முடியும்? அதிலும் பூதேவனாம் பிராமணன் புத்தியற்ற மண்டுவாயிருந்தாலும், அவனை ஆண்டவனாக மதித்து வழிபடவேண்டுமென்ற சீர்திருத்தத்தை வேறு எந்த மொழிதான் செய்யமுடியும்!

"பிராமணன் துர்ச்செய்கையுள்ளவனாயிருந்த போதிலும், சகலமான சுபா சுபங்களிலும் பூசிக்கத் தக்கவன்; அவன் மேலான தெய்வமாதலால்."

இதுவும் சமஸ்கிருதம் செய்த சீர்திருத்தங்களில் ஒன்று. பிராமணன் செய்யத்தகாத காரியங்களைச் செய்தபோதிலும், அவன் மற்றவர்களின் வழிபாட்டுக்கு உரியவனாகின்றானாம். காரணம்; அவன் மேலான கடவுளாக இருப்பதுதானாம். பிராமணனைக் கடவுளாக்கும் சீர்திருத்தத்தைச்செய்த சமஸ்கிருதத்தின் பெருமையே பெருமை! மக்களினத்திலேயே ஒருசாராரைக்கடவுளாக்கி, அவர்களையே மற்ற மக்கள் அனைவரும் வணங்கவேண்டும் என்ற சீர்திருத்தம் எவ்வளவு மகிமை வாய்ந்தது பாருங்கள்! இந்த அருமையான சீர்திருத்தத்தைச் சமஸ்கிருதமல்லாத வேறு எந்த மொழியில்தான் காணமுடியும்?

அன்பே கடவுள், அறிவே கடவுள், உண்மையே கடவுள் என்று கூறும் தமிழ்மொழி, பிராமணனே கடவுள் என்று கூறும் சமஸ்கிருத மொழிக்கு இணையாகுமா? அன்பையும் அறிவையும் கடவுளாக்கிக் காட்டும் தமிழ் மொழியைச் சீர்திருத்தம் செய்த மொழியென்று சொல்லக்கூடாது — பிராமணனைக் கடவுளாக்கிக் காட்டிய சமஸ்கிருதத்தையே சீர்திருத்த மொழியென்று சொல்லவேண்டும் — ஆச்சாரியார் கூறுகிறார், அந்தக்காலத்தில் சமஸ்கிருதத்தில்தான் சீர்திருத்தப் பிரச்சாரம் நடைபெற்றதென்று.

அந்தக் காலத்தில், அன்பே கடவுள் என்று திருமூலரும், அறிவே கடவுள் என்று தாயுமானவரும் தமிழ் மொழியில் கூறினர். ஆனால் அதற்கு முன்பே பிராமணனே கடவுள் என்று மனு சமஸ்கிருதத்தில் கூறிவிட்டார். எனவே, மனு கூறியதைத்தான் சீர்திருத்தப் பிரசாரம் என்று அன்பர் ஆச்சாரியார் கருதுகிறார் போலும்!

சீர்திருத்தம் என்பதற்குப் பொருள், முன்பு, ஒருவர், ஒன்றைப் பற்றிக் கூறியதை மறுத்து, அதற்கு அதுவல்ல பொருள், இதுதான் என்றுகூறுவதையேசீர்திருத்தம்என்பர் அறிவுடையோர். ஆனால்,ஆச்சாரியார் அந்தவழிசெல்லமறுக்கிறார். பிற்காலத்தில், ஒன்றைப் பற்றி ஒருவர் கூறியதற்கு, முற்காலத்தில் ஒருவர் அதற்குக் கூறிய கருத்தையே சீர்திருத்தமாகக் கொள்ள வேண்டுமென்கிறார். அதாவது அன்பையும் அறிவையும் கடவுளாக்கியவர்கள் சீர்திருத்தக்காரர்களல்ல வென்றும் பிராமணரைக் கடவுளாக்கியவரே சீர்திருத்தக்காரர் என்றும் கரு வேண்டுமாம். சீர்திருத்தம் என் சொல்லுக்கே சீர்திருத்தம் செய்ய பார்க்கிறார் ஆச்சாரியார். மனுவி

வழித்தோன்றல்தானே ஆச்சாரியார்—அவருடைய சீர்திருத்தமும் மனுவையொட்டித்தானே இருக்கும்! என்றபோதிலும், நெருப்புக்குப் பொருள் குளிர் என்று கூறும் குதர்க்கவாதம் இக்காலத்தில் செல்லுபடியாகாதென்பதை அன்பர் ஆச்சாரியார் போன்றோர் அறியாமல், ஆளுக்கும் இடத்துக்கும் ஏற்றபடி அறிவை அறியாமையோடு கலந்து அவதிப்படக் கூடாதென்பதே நமது வேண்டுகோளாகும்.

பிராமணனைக் கடவுளாக்குமளவுக்கு, மனு தன்னுடைய 'சீர்திருத்தப் பிரச்சாரத்தை' நடத்தியதால்தான், இன்று பெரும்பாலான மக்கள், பிராமணனைக் கடவுளாக ஏற்க மறுப்பதோடு, அப்படிப்பட்ட கடவுள் நாட்டுக்குத் தேவையில்லை என்று கூறுமளவுக்கும் விழிப்படைந்துவிட்டார்கள். என்றபோதிலும், அன்பையும் அறிவையும் கடவுளாக ஏற்றுக்கொள்ள எந்தவிதமான மட்ட அறிவுடையவனும் மறுக்க முன்வரவில்லை. காரணம்: அன்பையும் அறிவையும் கடவுளாகக்கொள்வதில் யாருக்கும் தொல்லையோ தொந்தரவோ ஏற்பட்டுவிடாது. ஆனால், பிராமணனைக் கடவுளாகக் கொண்டால், பிராமணரல்லாத அனைவருக்கும் பொறுத்திடுதற்கரிய பெரும் பெரும் தொல்லைகளும், துயரங்களும், கொடுமைகளும் கட்டாயம் ஏற்படும். காரணம்: நாம் கூறவில்லை. ஆச்சாரியாரின் அகராதிப்படி சீர்திருத்தக்காரரான மனுவே கூறுகிறார். இதோ அவற்றுள் சில:-

1. சூத்திரன் விலைகொடுத்து அடிமையாக வாங்கப்பட்டிருந்தாலும், இல்லாவிட்டாலும் அவனைப் பிராமணன் நிர்ப்பந்தப்படுத்தி வேலை வாங்கலாம். ஏனென்றால், கடவுள் சூத்திரனைப் பிராமணனுக்கு வேலை செய்யும் ஒரே நிமித்தமாகவே படைத்திருக்கிறார்.

2. பிராமணன் சூத்திரனுடைய பொருளை முழு மனச் சமாதானத்துடன்—சற்றேனும் பாவம் என்று எண்ணாமல்—கைப்பற்றிக்கொள்ளலாம். ஏனெனில், அவனுக்குச் சொந்தமான தொன்றும் இல்லையாதலாலும், அவன் சொத்தை அவன் எஜமான் எடுத்துக்கொள்ளலாமாதலாலும்.

3. ஒரு பிறப்பாளனாகிய சூத்திரன், இருபிறப்பாளராகிய பிராமணரைத் திட்டினால், அவன் நாவை அறுத்தெறிய வேண்டும்.

4. சூத்திரன் பிராமணர்களின் பேரையாவது சாதியையாவது இழிவாகக் கூறினால், பத்துவிரல் நீளமுள்ள பழுக்கக்காய்ச்சிய இரும்பை அவன் வாய்க்குள் செலுத்த வேண்டும்.

5. சூத்திரன் அகந்தையினால் குருமாருக்கு அவர்களுடைய கடமைகளைப்பற்றிப் போதிப்பானானால், அவன் வாய்க்குள்ளும் காதுக்குள்ளும் கொதிக்கிற எண்ணெயை ஊற்றும்படி செய்வது அரசன் கடமை.

6. சூத்திரன் உயர்குலத்தானை அடிப்பதற்குக் கையையாவது தடியையாவது உயர்த்தினால், அவன் கையை வெட்டி எறிந்து விடவேண்டும்: அவன் கோபத்தினால் உதைத்தால் அவன் காலை வெட்டி எறிந்து விடவேண்டும்.

7. தாழ்ந்த குலத்தான் உயர்ந்த குலத்தானோடு சமமாக உட்கார எண்ணினால், அவனை இடுப்பில் சூட்டுக்கோல் கொண்டு சுட்டுத் தேசத்தை விட்டுத் துரத்திவிட வேண்டும். அவன் பின்பக்கத்தை வெட்டியெறிந்து விடவேண்டும்.

8. சூத்திரன் அகந்தையால் பிராமணன் மேல் உமிழ்ந்தால், அவன் உதடுகள் இரண்டையும் அரசன் வெட்டியெறியும்படி செய்யவேண்டும்.

இவை சமஸ்கிருதத்தில் கூறப்படும் "சீர்திருத்தங்கள்" பலவற்றுள் சிலவாகும். சமஸ்கிருதத்தில் கூறப்பட்டுள்ள இச்சீர்திருத்தங்களை இக்காலத்தில் செய்யமுடியாது—சட்டம் அதற்கு இடந்தராது. எனவேதான், சமஸ்கிருதத்திற்கு எதிர்காலத்தில் நல்ல மதிப்பை உண்டாக்கவேண்டுமென்று ஆச்சாரியார் விரும்புகிறார்—ஆரூடம்கணிக்கிறார். அவருடைய ஆரூடத்தின்படி சமஸ்கிருதத்திற்கு எதிர்காலத்தில் நல்லமதிப்புஏற்பட்டுவிட்டால், நாம் மேலே குறிப்பிட்டுள்ள சமஸ்கிருதச் சீர்திருத்தங்கள் நாட்டிற்கு வந்தாலும் வரலாம் என்று ஆச்சாரியார் கருதுகிறார் போலும்! "கடைந்த வெண்ணெய் மோர் புகா" என்ற பழமொழியைக் கனம் ஆச்சாரியார் மறந்து கனவு காண்கிறார்.

> "எந்தமொழி நாட்டின் அலுவல்களுக்குப் பயன்படுவதில்லையோ அது மங்கிவிடுகிறது. மேலும் நாட்டில் சமஸ்கிருதச் சொற்களின் பிரயோகம் குறைந்துவிட்டது. இதனால்தான் சமஸ்கிருதம் அழியும் நிலையை அடைந்தது."

என்றும் அங்கலாய்க்கிறார் — அதற்குப்புத்துயிர் அளிக்க — மறுபிறப்புண்டாக்க முயல்கிறார்.

எந்த மொழி நாட்டின் அலுவல்களுக்குப் பயன்படுவதில்லையோ அது மங்கிவிடுகிறதென்று கூறும் ஆச்சாரியார் அவர்களை நாம் ஒன்று கேட்க விரும்புகிறோம். தமிழ்நாட்டில்தமிழ் அரசியல் மொழியாகஆக்கப்படாமல் வேற்றுமொழி அரசியல் மொழியாக்கப்பட்டால், தமிழ்மொழி மங்கிவிடாதா? இந்திமொழி அரசியல் மொழியாகிவிட்டால், தமிழ்மொழி மங்கிவிடாதா? அதோடு சமஸ்கிருதமும் சகலரும் கற்கவேண்டியமொழியாகிவிட்டால் தமிழ்மொழியின்நிலை என்னவாகும்? என்பனவற்றிற்கு ஆச்சாரியார் விடைகூறுவிட்டாலும், தம்முடைய ஆழ்ந்த அனுபவத்தைக் கொண்டு அறிவுக்குச் சிறிது வேலை கொடுத்துச் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? என்று கேட்கிறோம்.

சமஸ்கிருதச் சொற்களின்பிரயோகம்நாட்டில் குறைந்துவிட்டதென்று குமுறுகிறார் ஆச்சாரியார். ஏன் இந்தக்குமுறலும் கொதிப்பும்? ஒரு நாடு, தன்நாட்டு மொழியைக் கண்ணுங்கருத்துமாகப் பாதுகாத்து, அதனுள் பிறமொழிச்சொற்கள் கலவாமல் பார்த்துக்கொள்வதைத் தவறென்று கூறுகிறார் ஆச்சாரியார். கூறவில்லை! கொதிப்படைந்து பேசியிருக்கிறார்,

> "ஆகையால், இப்பொழுது நாம் மறுபடியும் சமஸ்கிருதத்தைப் பழைய நிலைக்குக் கொண்டுவரவேண்டும்"

என்று ஆத்திரமும் ஆவேசமும் கொண்டு பேசியிக்கிறார். ஏன் இந்த அழுகுரல்? சமஸ்கிருதம் தான் தனிச்சிறப்புவாய்ந்த மாணிக்கமனைய மொழியாயிற்றே! அதனை

(12-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு 26—3—50 [காஞ்சி

வேதனையூட்டும் ஏற்பாடு

★

"மக்களின் நன்மை ஒன்றுதான் எங்கள் குறிக்கோள்! மக்களின் வசதிக்கான காரியங்கள் எவையெவையோ அவற்றையெல்லாம் செய்து கொடுப்பதுதான் எங்கள் கடமை! அதற்காகவே மன்னராட்சியை ஒழித்துக்கட்டி, மக்களாட்சியை ஏற்படுத்தியுள்ளோம்! ஆகையால், பொதுமக்களே! உங்கள் தேவைக்கும்—வசதிக்கும் ஏற்ப எந்தெந்தக் காரியங்களைச் செய்துதரவேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களோ, அவற்றையெல்லாம் செய்துதரவே நாங்கள் ஆட்சிப்பீடம் ஏறுகிறோம்" என்ற இன்னபிற உறுதிமொழிகளைக் கூறி ஆட்சிப்பீடமேறிய ஆளவந்தார்கள் — 'காருண்யமிக்க' காங்கிரஸ் சர்க்கார், செய்துவரும் காரியங்களைப் பார்த்தால் மக்கள் உள்ளத்தில் வேதனைப் புயலைக் கிளப்பி விடுபவையாகவே இருக்கின்றன. மக்கள் எதிர்பார்த்தது நன்மை — கிடைப்பதோ வேதனை!

இனிமேல் தபால் நிலையங்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையன்றும் மூடப்படுமாம்! கடிதங்கள் கொடுப்பதோ, எடுப்பதோ அன்று நடைபெறாதாம். வெள்ளி சனிக்கிழமைகளில் போடப்படும் கடிதங்களை மக்கள் ஞாயிற்றுக்கிழமையில் பெற்றுக்கொள்ளக் கூடாதாம்! ஞாயிற்றுக்கிழமையன்று வெளியூர்ச் செய்திகளை மக்கள் அறியக் கூடாதாம்! இதுபோலவேஞாயிற்றுக்கிழமையன்றுவெளியூர்த்தொடர்பைகடிதமூலமாக வைத்துக்கொள்ளும் நோக்கத்தைக் கைவிட்டுவிட வேண்டுமாம். இந்த ஏற்பாடு ஏப்ரல் மாதத்திலிருந்து நடைமுறைக்கு வருமாம்.

மக்களாட்சி நடத்துவதாகச் சொல்லிக்கொள்ளும்காங்கிரஸ் சர்க்காரின் இந்த ஏற்பாட்டினால், பொது மக்களின் நன்மைகளும், வசதிகளும் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறதென்பதை உணரும் ஆற்றல் இன்றைய ஆளவந்தார்களுக்கு நிச்சயமாக இல்லையென்றே தெரிகிறது. தெரிந்திருந்தால் தேவையும் அவசியமுமற்ற இந்த ஏற்பாட்டை செய்திருக்கவே மாட்டார்கள். ஞாயிற்றுக் கிழமை தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு இன்றியமையாத செய்தியைத் திங்கட்கிழமைதான் தெரிந்து கொள்ளவேண்டுமென்றும், இதுபோலவே ஞாயிற்றுக்கிழமை தெரிவிக்கவேண்டிய ஒரு செய்தியைத் திங்களன்றுதான் தெரிவிக்க வேண்டுமென்றும் மக்கள் நலனை விரும்பி ஆட்சி நடத்துவதாகச் சொல்லிக் கொள்ளும் ஒரு சர்க்கார் கூறுமானால், அப்படிப்பட்ட சர்க்காருக்கு அந்தப் பெயர் பொருந்துமா? மக்கள் நலனில் துளியாவது அக்கறை இருக்கிறதா என்று யார்தான் எண்ணாமல் இருக்கமுடியும்?

வெவ்வேறு ஊர்களில் இருக்கும் மக்கள் ஒருவரோடொருவர் தொடர்புவைத்துக் கொள்வதற்கு இன்றியமையாத சாதனங்களாக இருப்பவை புகைவண்டியும் தபாலும்தான். கடிதப் போக்குவரத்தை ஒருநாள் அறவே ஒழித்துக்கட்டுவதால், மக்களின் வாழ்க்கையில் எவ்வளவு சிக்கலும் வேதனையும் ஏற்படும் என்பதைச் சிறிதளவு அறிவுடையாரும் சிந்தித்து உணராமல் இருக்கமுடியாது. மக்களுக்கு மிக மிக இன்றியமையாத் தேவையான கடிதப் போக்குவரத்தை ஒழித்துக் கட்டுவதும், அதே சமயத்தில் மக்களின் நன்மைகளைச் செய்துதரவே நாங்கள் ஆட்சி மன்றம் ஏறியுள்ளோம் என்று வாயளப்புச் செய்வதும் நேர்மையா — நெறிமுறையின் பாற்பட்டதா என்று எண்ணிப் பார்க்கவேண்டாமா?

ஞாயிற்றுக் கிழமை ஒன்றுதான் மக்களுக்கு ஓய்வுநாள். அன்றுதான் வெளியூர்ச் செய்திகளை மக்கள் பத்திரிகைகளில் படித்துத் தெரிந்து கொள்வது வழக்கம். பெரும்பாலான பத்திரிகைகள் அதிலும் வார வெளியீடுகள் பல, சனிக்கிழமையன்றுதான் தபாலில் அனுப்பப்படுகின்றன. அவை ஞாயிற்றுக்கிழமையன்று மக்கள் கையில் கிடைக்கும், ஆனால் சர்க்காரின் இந்த ஏற்பாட்டினால், ஞாயிற்றுக்கிழமை கிடைக்க வேண்டிய பத்திரிகைகள் மக்களைக்குத் திங்கட்கிழமைதான் போய்ச் சேருகின்றன. ஞாயிற்றுக்கிழமையை ஓய்வாகப்பெற்றுப்பத்திரிகைகளைப் படித்துப் பயன்பெறும் வாய்ப்பும் வசதியும் இதனால் தடைபடுகின்றது. இல்லை, தகர்த்தெறியப்படுகின்றது. எந்த வகையில் பார்த்தாலும் இந்த ஏற்பாட்டினால் பொதுமக்களின் நன்மைகளும் வசதிகளும் பெரும் அளவில் பாதிக்கப்படுகின்றன என்பதைச் சர்க்கார் உணர்ந்து, தனது தவறைத் திருத்திக் கொள்வதுதான் நேர்மையும் கடமையுமாகும்.

—❀—

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

எனவே, முன்னைவிட அதிகமான அளவில் பிரச்சாரம் செய்யவேண்டிய அவசியமும் அவசரமும் ஏற்பட்டிருக்கிறது — பொது மக்களிடம் தொடர்பு கொள்ளக் கூடிய தொண்டர்களின் சேவை தேவைப்படுகிறது. தொண்டர்களோ! — திணறிக் கிடக்கின்றனர், தங்களின் தலைவர்கள் வாழும் சுகபோக நிலையைக் கண்டு வெம்பிக் கிடக்கின்றனர்!

பொறுமை அவர்கள் இதயங்களிலெல்லாம் பொங்கிக் கிடக்கிறது; இதை மறுக்க முடியாது! இந்த நிலையைச் சமாளிக்கவேண்டியது, காங்கிரசுக்கு இன்று ஒரு மகத்தான வேலையாகிவிட்டது.

இந்த வேலையின் திட்டம்தான் 'புது உத்தியோகங்கள்' சிருஷ்டிக்கப்படுவது. தங்களவர்களைத் திருப்தி செய்வதற்காகத் தனியேற்பாடு செய்யப்படுகிறது.

வீண்வேலைக்கெனப் பொதுப் பணத்தை விரயமாக்கத் திட்டம் தீட்டப்படுகிறது.

இந்த முயற்சி — எண்ணிய பலனைத் தராது; காங்கிரஸ் ஆட்சியின் ஊதாரிப்போக்குப்பற்றிமக்கள் மன்றத்தில் எழும்பியிருக்கும் அதிருப்தியை வளர்க்குமே ஒழிய அணைத்துவிடாது.

★

"வீண் வேலை"

"வீண்வேலை வேண்டாம்! வெட்டிச் செலவு ஆகுமே யொழிய, வேலை யொன்றும் முடியப்போவதில்லை."

"தந்திரமிது, தங்கள் ஆட்களுக்கு வேலை தேடித்தரச் செய்யும், மறைமுக ஏற்பாடு."

"பணம் மக்களுடையது — அநாவசியமாக அதைக் கோட்டாதீர் அடுக்காது."

"போலீசும்–சட்டமும் கையிலிருக்கையில் ஏனிந்தஏற்பாடு? எதற்காக இந்த யோசனை!"

என்றெல்லாம், அந்தயோசனை கூறப்பட்டபொழுது, நாட்டுநலனில் அக்கரை கொண்டோர் கண்டித்தனர். எண்ணங்களைக் கட்டுப்பாட்டுக் கூண்டில் போட்டுக்கொள்ளாத, சுதந்திர நிலையிலுள்ள பத்திரிகைகளும் கண்டித்தன. மக்களைச் சந்தித்த போதெல்லாம், நாமும், பொது மேடையில் பன்முறை கண்டித்திருக்கிறோம் - இருந்தும், இப்போது, மதுவிலக்கு மந்திரியார் சட்டசபையில் அறிவித்திருக்கிறார், யோசனை செய்துவந்தோம, அதை நிறைவேற்ற இப்போது முடிவு செய்துவிட்டோம் என்று தனது இலாகாவுக்கான மான்யத் தொகையைப் பிரேரபித்துப் பேசியபொழுது குறிப்பிட்டிருக்கிறார்கனம் சஞ்சீவிரெட்டி.

*   •   *

மது—ஒரு விஷவிருட்சம்! அண்டினோரின் வாழ்வு, புயலில் சிக்கிய ஆலிலைபோல்தான் ஆகும். ஆகவே அதுகூடாது, அதை வெட்டிவீழ்த்துவதுதான் முறை என்று எண்ணினர். எல்லோரும், அதையேற்றனர்—சரியென்று கூறினர், சம்மதம் தந்தனர்; தங்களால் முடிந்தவரை ஒத்துழைப்பதாக உறுதி கூறினர்!

மரத்தை வெட்டிவிட்டால்மட்டும் போதாது; கீழிருந்து வளர்ந்தாலும் வளரலாம்! ஆகவே, அதன் முளை எங்கேயிருந்தாவது வளர்ந்தால், அதை அப்போதே கிள்ளிவிடவும் வேண்டும். ஆகவே அதற்கான ஏற்பாடும் செய்திருக்கிறோம், ஆட்களையும் நியமித்திருக்கிறோம் அந்த வேலைக்கென!—என்று சொல்லினர் மரத்தை வெட்டியவர்கள்.

மகிழ்ச்சியேற்பட்டது, ஊர் மக்களுக்கு. விஷவிருட்சம் வெட்டப்பட்டது, வேரிலிருந்து அது மீண்டும் துளிர்க்காமலும் காவல் போடப்பட்டுவிட்டது, என்ற செய்தியைக் கேட்டதும்.

இதே மகிழ்ச்சிதான், நாட்டு மக்களுக்கு உண்டாயிற்று. காங்கிரஸ் சர்க்கார் மதுவிலக்குச் சட்டம் கொண்டுவந்தபோதும், அதை நிறைவேற்றப் போலீஸ் படைகளை நியமித்தும் அதிகாரங்கள் வழங்கியும் ஏற்பாடுகளைச் செய்தபொழுதும்!

மது—ஒரு விஷம். மனித வாழ்வைச் சூறையாடும் புயல்! மக்கள்வாழ்வில் மலர்ச்சியை விரும்பும் எவரும் மதுவேண்டும் என்று கூறமாட்டார்கள். எனவேதான், மதுவிலக்குப் பற்றிச் சர்க்கார் நடவடிக்கை மேற்கொண்டதும், எதிர்க் கட்சியினராகிய நாமும்

வரவேற்றோம்
பத்திரிகைகள் மூலம்
பிரச்சாரம் செய்தோம்
மேடைகளில் பாராட்டினோம்.

மதுவிலக்கு நடவடிக்கையெடுத்த காங்கிரஸ் ஆளவந்தார், மதுவிலக்கைக் கவனிப்பதற்கென விசேஷ போலீஸ் படைகளையும் நிர்மானித்தனர்—கட்டிய வீட்டுக்குக் காவல் வேண்டும், போட்ட சட்டத்தை அமுல் நடத்தவும் பொறுப்புள்ளவர் வேண்டும் என்று கூறிக்கொண்டு!

மதுவிலக்கு நடவடிக்கையெடுத்துக்கிட்டதட்ட இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. மாகாணமுழுவதிலும் இன்று மதுவிலக்கு — ஆனால் குடிகாரர்கள் இல்லையென்று கூறிவிட முடியாது. மதுவிலக்கு இருக்கிறது; ஆனால் மது இருக்கிறது! பகிரங்கமாக அல்ல; திருட்டுத்தனமாக.

ஏதாவது ஒரு நடவடிக்கை அரசாங்கத்தால் எடுக்கப்படுமேயானால் அதை ஒழுங்கோடு நிறைவேற்றி, வெற்றியுள்ளதாக ஆக்கவேண்டும். சட்டம் செய்துவிட்டு, 'போட்டதிட்டம் வெற்றிபெறவில்லை' என்று சஞ்சலத்தைப்பதிலாகத் தரும் எந்தச்சர்க்காரையும் எவரும் மதியார். திறமையற்ற சர்க்கார், நிர்வாகமே தெரியாத ஆட்சி, என்றே மக்கள் கூறத்தலைப்படுவர்.

மதுவிலக்குக் கொண்டுவந்தனர்—இரண்டு ஆண்டுகளாயிற்று நடவடிக்கை எடுத்து. எனினும், பல இடங்களில் மது இருக்கிறது திருட்டுத்தனமாக—அதுகண்டு பிடிக்கப்பட்டு நடவடிக்கையெடுக்கப்படவில்லை என்று பலர்—குறை கூறுகின்றனர். சட்டசபை உறுப்பினர்கள்கூட இக்குற்றச்சாட்டைக் கூறுகின்றனர்.

சட்டம் இருக்கிறது — அதை நிறைவேற்றிக்காப் போலீஸ் இருக்கிறது, மீறியோரைத் தண்டிக்க விசாரணைமன்றங்கள் இருக்கின்றன. தவறிழைத்தோரைத் தள்ளச் சிறைகள் இருக்கின்றன. எனினும் மது விலக்கப்படவில்லையென்றுகூறப்படுகிறது!

மதுவிலக்குச் சட்டம் பூரணமாக வெற்றிபெறவில்லை—என்ற குற்றச்சாட்டை இந்த ஆளவந்தார்மீது வீசவேண்டும் என்ற ஆசையுடையவர்களல்ல நாம். மதுவிலக்கு வெற்றிதரவில்லையென்றால், நமக்கு மகிழ்ச்சியேற்படாது—மனத்துயர்தான் உண்டாகும். காரணம், மது, கொடுமைகளின் பிறப்பிடம் — அது கூண்டோடு தொலைக்கப்படவேண்டும்என்பது நமது கருத்தாகும். அதோடு, ஆட்சியாளரே தங்களது மதுவிலக்குத்திட்டம் பலன்தரா நடவடிக்கையாகிவிட்டது என்று கருதுவதாகத் தெரிகிறது.

இந்தக் கருத்தை, சட்டசபையில் சஞ்சீவியார் வெளியிட்ட தகவல் நமக்குத்தருகிறது.

> "மதுவிலக்குக்கெனத் தாலுக்காவுக்கு இருவர்வீதம் பிரச்சாரகர்களை நியமிக்கச் சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்கள்."

தகவல் தந்திருக்கிறார் அவர். அவர்களுக்கு 70 ரூபாயிலிருந்து 100 ரூபாய்வரை சம்பளமாம். அதுமட்டுமல்ல, அலவன்சுகூட உண்டாம்!

மதுவிலக்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு ஆண்டுகள் இரண்டாகிவிட்டன—இப்போது மந்திரியார் அறிவிக்கிறார் — மதுவிலக்குப் பிரச்சாரகர்களை நியமனம்செய்யப்போவதாக. மதுவிலக்குச்சட்டம் பிறப்பித்து—இரண்டு ஆண்டுகளுக்குப்பின் அறிவிக்கிறார்!!

ஆலமரத்தை வெட்டினர் — அது துளிர்க்காமல் காவலும் போட்டனர், சிறிதுநாட்கள் சென்றபின் "ஆலமரத்தை வெட்டவேண்டிய தன் அவசியம்" பற்றிப் பேச்சிலரை ஏற்பாடு செய்யப்போகிறேன் என்று, மரத்தைவெட்டியவர்கள் கூறுகின்றனர். விசித்திரமான காட்சிதான் கண்முன் வருகிறது சஞ்சீவியார் தகவலைக் கண்டபொழுது!

மரத்தை வெட்டிவிட்டு — பின் அதைவெட்டவேண்டுவதன் அவசியம்பற்றிப் பேசப்போகிறேன் என்பது வீண்வேலைமட்டுமல்ல, விவேகம் இல்லாததன் விளைவுமாகும்.

இதேபோல, மதுவிலக்கு அமுலாகி இரண்டு ஆண்டுகள் சென்றபின் பிரச்சாரகர்களை நியமிக்கப் போகிறோம் என்பது கேலியையும் கேள்வியையுந்தான் எழுப்பும்!

* • •

மதுவிலக்கு வெற்றிகரமாக நடைபெறப் பிரச்சாரகர்களை நியமிக்க யோசனையிருப்பதாக முன்பு அறிவிக்கப்பட்டபொழுது — அக்கூற்றுக்கு நாலுமுனைகளிலிருந்தும் எதிர்ப்புகள் எழும்பின!

"பதவி — வேலை" இரண்டிலும் ஆசைப்பட்டுக்கிடக்கும் காங்கிரஸ் தொண்டர்களைச் சமாதானப்படுத்தவே இந்த ஏற்பாடு—மதுவிலக்குக்குப் பிரசாரகர்களை நியமிப்பது.

தலைவர்கள் — மந்திரிகளாகவும் எம். எல். ஏக்களாகவும்ஆகி, சுகமனுபவிக்கிறார்கள். இது, தொண்டர்களைத் தூண்டிவிட்டிருக்கிறது. அவர்கள் கோபத்தையடக்க, கொடுக்கப்படும் ரொட்டித் துண்டுகள்தான் இந்த வேலைகள்.

காங்கிரஸ் பிரச்சாரத்துக்கு ஆட்கள்வேண்டும். இன்று காங்கிரஸ் கரைந்து வருகிறது — அதைக்காப்பாற்ற முன்போலப் பிரச்சாரம் செய்யவேண்டுமென எண்ணுகின்றனர். எனவே ஆட்சி கையிலிருப்பதால், தங்கள் பிரச்சாரகர்களுக்கு சர்க்காரின் சம்பளம் கொடுத்துத் தங்கள் கட்சிவேலையைக் கவனிக்கத் தூண்டப்போகிறார்கள்.

இதுபோன்ற பலவித கண்டனங்கள் முன்பு, மேற்படி யோசனை தெரிவிக்கப்பட்டபொழுதே எழும்பின. எனினும் ஆசை இன்னும் விட்டபாடில்லை; அவசர அவசரமாகப் பிரச்சாரகர்களை நியமிக்கப் போகிறார்களாம்; அந்தப் பிரச்சாரகர்களின் வேலை மதுவிலக்குப் பிரச்சாரம்மட்டுமல்லவாம்; இதர பிரச்சாரங்களுக்கும் அவர்கள் பயன்படுத்தப்படுவார்களாம்!

X X X

காங்கிரஸ், ஆட்சிப்பீடம் ஏறியபின் தங்கள் புனருத்தாரணத் திட்டங்கள் என்று கூறிக்கொண்டு சில இலாகாக்களை ஏற்படுத்தினர். கதர் அபிவிருத்தி, பிர்க்கா அபிவிருத்தி போன்ற புது இலாகாக்கள் தோன்றின — இந்தவேலைகளுக்கென 'பலர்' உத்தியோகஸ்தர்களாயினர்!

பிர்க்கா அபிவிருத்தி இலாகா, இதுவரை செய்து வரும் செயல்கள் எல்லோருக்கும் தெரிந்ததுதான்! ஏராளமான பணம் அந்த இலாகாவுக்கெனச் செலவழிக்கப்பட்டு வருகிறது—அந்தந்த மாவட்டங்களில் அந்த இலாகாவின் அதிகாரிகளைப் பார்த்தால் போதும்—எல்லாம் 'கதர்ச்சட்டை'கள்!

ஆள்பவர் காங்கிரஸ்காரர்கள்—ஆனால், ஆட்சி அவர்களுக்காக மட்டுமல்ல; மக்களுக்காக!

சர்க்காரின் பல புது இலாகாக்கள் காங்கிரஸ்காரர்களுக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன, என்ற குற்றச் சாட்டுப் பரவி வருகிறது. சர்க்காரின் செய்தி விளம்பர இலாகாவே இதற்கு ஓர் உதாரணம்.

அரசியல் கட்சி, ஆட்சிப்பீடம் ஏறியதென்றால், தனது அதிகாரத்தைக் கொண்டு, மக்களுக்கான நன்மைகளைச் செய்யவேண்டும்—மக்களும் அதை எதிர்பார்த்துத்தான் அக்கட்சியைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

மக்கள் நலனுக்குப் பதில்—சுயநலம் அந்த ஆட்சியில் சுடர்விட்டெரியத் துவங்குமேயானால் அது ஆட்சியாகாது; அரசியலின் ஒரு 'வேடிக்கைக் கூட்டம்' என்றே மதிக்கப்பெறும்!

காங்கிரஸ் கட்சி—மக்கள் நலனையே மகத்தானதாகக் கொண்டு வளர்க்கப்பட்ட கட்சி. வளர்ந்து ஆட்சிப்பீடம் ஏறிய மக்கள் கட்சி. எனவே, மக்கள், இக்கட்சி ஆட்சிப்பீடம் ஏறினால் அளவற்ற நன்மைகளையே செய்யும் என எதிர்பார்த்தனர்! சுயநலமும் சொந்தவாழ்வும் ஆட்சியில் தலை நீட்டாது; அத்தனை பேரும் தியாகிகள்; ஆகவே நாடு, மலர் வனமாகும், மகிழ்ச்சிததும்பும் நன்மைகள் மலரும் என எதிர்பார்த்தனர்

ஆனால், எதிர்பாராததுநடக்கிறது; எண்ணிய எண்ணங்கள் மண்தூசிகளாகிவிட்டன — காங்கிரஸ் ஆட்சியின் பாதை கண்ணீர்ப் பாதையாகிவிட்டது, கலங்க வேண்டிய நிலைமையைச் சிருஷ்டித்து விட்டது!

> "சுயராஜ்யம் வந்தபிறகு காங்கிரஸ்காரர்களெல்லோரும் சுகவாசிகளாகி விட்டார்கள்என்றும், பர்மிட்டுகளையும் லைசென்ஸ்களையும் வாங்கிக்கொண்டு பணக்காரர்களாகி விட்டார்கள் என்றும் சிலர் சொல்கிறார்கள்"
>
> "இவைகளெல்லாம் சுத்தப் புளுகுகள்"

ஈரோட்டில் அண்மையில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் காமராஜ் சிந்தியிருக்கும் முத்துச் சொற்கள் இவை!

சுகவாசிகளாகவில்லை
பணக்காரர்களாகவில்லை
லைசென்ஸ், பர்மிட் விரும்பவில்லை
இவையெல்லாம் சுத்தப் புளுகுகள்

பொறுப்புள்ளவர் அவர், தமிழ்நாட்டின் காங்கிரஸ் தலைவர்

சென்னை மாகாண காங்கிரஸ் ஆட்சியின் 'சூத்ரதாரி' — காமராஜ் கூறுகிறார், இந்த வார்த்தைகளை.

தங்கள் மீது சாட்டப்படும் குற்றச்சாட்டுகளை இல்லையென்று, மறுக்கிறார் அவர். அது அவருடைய உரிமை; பொறுப்புங்கூட! ஆனால், அவரது இந்த அருஞ்சொற்கள்—காலங் கடந்து புறப்பட்டிருக்கின்றன!

கிருபளானியின் சோகம், பட்டேலின் வருத்தம், பட்டாபியின் கண்ணீர்—காங்கிரஸ் ஆட்சியின் "நிலை" பற்றி எத்தனையோ தடவைகள் எதிரொலித்திருக்கின்றன நாட்டில்.

பல காங்கிரஸ் தலைவர்கள், பலமுறை, காங்கிரசின் "ஊழல்கள்" குறித்துக் கண்ணீர் சிந்தியிருக்கின்றனர், கண்டன அலைகளைத் தெரிவித்திருக்கின்றனர்! கள்ள மார்க்கெட்டும், கொள்ளை இலாபமுமே காங்கிரஸ்காரர்களின் இலட்சியங்களாகிவிட்டன என்று வெளிப்படையாக விளக்கம்—தெளிவுரை என, பல வழிகளில் வெளிவந்திருக்கின்றன.

மந்திரிமார்களை பெர்மிட், லைசென்ஸ் விவகாரங்களில் தலையிட்டதாகக் காங்கிரஸ் கூடாரத்தைச் சேர்ந்த ஆந்திர கேசரி பிரகாசம்—குற்றஞ் சுமத்தியிருக்கிறார். அது சந்தி சிரிக்கிறது!

"எம். எல். ஏ. ஆகுமுன் என்ன சொத்து இருந்தது? இப்போது, எவ்வளவு சொத்து இருக்கிறது-கார்கள் எத்தனை?—கணக்கெடுங்கள் தெரியும்!"

என்றெல்லாம் பலர், பலமுறை சவால் விடுத்திருக்கின்றனர் சர்க்காருக்கு.

இருந்தும், இப்போது, காமராஜ் கூறுகிறார், இவைகளெல்லாம் சுத்தப் புளுகுகளாம்! "சொந்த நிலை"யைக் கூட மறந்துவிட்டுக் கூறுகிறார்—இவைகள் சுத்தப் புளுகுகளாம்; சொத்தை வார்த்தைகளாம்! மேலும் அவர் சொல்லுகிறார், "பத்தினி" பெருமையை நிலை நாட்ட.

"மதுவிலக்குப் பிரச்சார வேலைக்கு நல்ல சம்பளம் கொடுக்கப்படுகிறதென்றாலும், அந்த வேலையை ஏற்றுக்கொள்ள ஒரு காங்கிரஸ்காரர் கூட முன்வரவில்லை. சர்க்கார் உத்தியோகங்களைக் காங்கிரஸ்காரர்கள் விரும்பாததுதான் இதற்குக்காரணம்."

கடல் நீர் கரிக்கவில்லை, காக்கையின் நிறம் வெண்மை, இத்தகைய உண்மையைக் கூறுகிறார், இந்த ஊர றிந்த தலைவர். சர்க்கார் உத்தியோகங்களைக் காங்கிரஸ்காரர்கள் விரும்பவில்லையாம்—எனவே, அதிக சம்பளங் கொடுக்கப்படுகிறதென்றாலும் சர்க்கார் உத்தியோகமான மதுவிலக்குப் பிரசாரகர்கள் வேலைக்கு எவரும் வரவிரும்பவில்லையாம்—கண்ணியத்தின் உருவாக இருக்க வேண்டிய காமராஜ் அவர்கள் கூறுகிறார் இவ்விதம்.

கண்டனங்கள் அதிகமாகிவிட்டன, சர்க்கார் தனதுகட்சியினரைத் திருப்திப்படுத்தப் புது இலாக்காக்களைச் சிருஷ்டி செய்கின்றனர், சொந்த ஆட்களுக்குப் புது வேலைகளைத் தருகின்றனர்—என்ற குற்றச்சாட்டுகளை மறுக்கிறோம், என்ற நினைவுடன் இந்தக் கூற்றுக்களைக் கூறியிருக்கிறார், பொதுக் கூட்டத்தில்.

நல்ல சம்பளம் கொடுக்கப்படுகிறது
எனினும் எந்தக்காங்கிரஸ்காரரும் விரும்பவில்லை

இந்த வார்த்தைகளின் மூலம் காங்கிரஸ்காரர்களின் 'தியாகத் தன்மை'யை நிரூபிக்கமுயல்கிறார். வீண் முயற்சி, எனினும் விருதுநகரார் முயற்சித்துப் பார்க்கிறார்!

* * *

மதுவிலக்கு — காங்கிரஸ் நிர்மாணத்திட்டங்களில் ஒன்று. காந்தியாரின் இலட்சியங்களில் ஒன்று, நாட்டு மக்களின் நல்லாதரவைப் பெற்றது, எக்கட்சியும் விரும்புவது.

காங்கிரஸ்காரர்கள் மதுவிலக்கிற்காக—மண்டைகளில் தடியடிகளைத் தாங்கினர், சட்டமறுப்புச் செய்தனர், சிறைக்குச் சென்றனர்! ஆட்சிப் பீடம் ஏறியதும், மதுவிலக்கைச் சட்டமாகவும் செய்தனர்-மக்களும், நாடும் மகிழ!

எடுத்த நடவடிக்கையை வெற்றியாக்க, போலீசும் சட்டமும் துணையாக்கிக்கொள்ளப்பட்டன. இந்நடவடிக்கைக்கு எதிர்க்கட்சிகள் யாவும் தங்கள் ஆதரவைத் தந்தன.

ஏகோபித்த ஆதரவுடன் தொடங்கப் பெற்ற இக்காரியம் வெற்றியளிக்கவில்லை யென்று இன்று கூறப்படுகிறது—மக்கள் ஒத்துழைப்பு இல்லாத காரணத்தால்தான் கள்ளக் குற்றங்கள், திருட்டுச் சாராயம், மலிந்திருக்கிறது—எனவே, இன்று சம்பளங் கொடுத்துப் பிரச்சாரகர்களை நியமிக்கப் போகிறோம்என்றுதகவல் தருகின்றனர்.

பிரச்சாரம்— இன்று துவக்கப் போகிறோம் என்று கூறுகின்றனர், சட்டம்செய்தவர்கள். அதற்குச் சம்பளம் கொடுத்து ஆட்களை நியமனம் செய்யப் போகிறோம் என்று துணிவுடன் வெளியிடுகின்றனர்.

சர்க்கார்—இன்று புயலில் சிக்கிய படகாக இருக்கிறது; குறிப்பாக நிதி நிலைமையைப்பொறுத்தமட்டில்! சிவில் நிர்வாகச் செலவும், போலீசுக்கு எனச் செலவழியும் தொகையும், மிக மிக அதிகமாகி—சர்க்காரை ஆட்டுகிறது. அடிப்படைத்தேவைகளைப் பூர்த்தி செய்துதர முடியாமல் சிக்கித் திகைக்கின்றனர்.

இந்த நெருக்கடியான நேரத்தில், புது உத்தியோகங்களையும் சிருஷ்டிக்கப் போகிறோம் என்று கூறுகின்றனர். இதற்கெனப்பணத்தைச்செலவிடத் திட்டம் தீட்டுகின்றனர்!

பிரச்சார வேலைகளுக்கு என சர்க்காரில் உத்தியோகங்களை உண்டாக்கப் போவதாக அறிவிக்கின்றனர். பிரச்சாரம், ஒரு பீரங்கி! மக்கள் மனதில் நியாயங்களைப் பரவ விடும் ஒரு சூரியன்! நல்வழியில் மக்களை நடத்திடச் செய்யும் ஒரு பாதை. பிரச்சாரத்தின் பெருமைகளை நாம் மறுக்கவில்லை; பிரச்சாரத்தின் மூலம் பல காரியங்களைச்சாதிக்கலாம்!

இத்தகைய பிரச்சாரத்தைச் செய்ய சர்க்கார் வசம் வசதிகள் இல்லையென்று கூறமுடியாது; சர்க்காரை ஆளும் கட்சியிடமும் வசதிகளும், வாய்ப்பும் நிறைய இருக்கின்றன!

கடந்த 19ந் தேதியன்று கூடத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஒரு பிரச்சார இலாக்காவை நியமித்திருக்கிறது—தனது கட்சி வேலைகளுக்கென.

ஐந்து இலட்சம் ரூபாயில் காங்கிரஸ் கட்சிக்கென சென்னையில் கட்டிடம் நிர்மாணிக்கத் திட்டமிட்

(அடுத்த பக்கத்தில்)

ஆச்சாரியார் ஆரூடம் பலிக்காது

7-ம் பக்கத் தொடர்ச்சி

ஏன் மற்ற மொழிகளுடன் கலக்க விடவேண்டும்? சமஸ்கிருதத்தின் கலப்பு, மற்ற மொழிகளில் குறைந்து விட்டகாரணத்தால்தான் அது மங்கி விட்டதென்று ஏன் மனம் புழுங்க வேண்டும்? அதைச் சரியாக வளர்த்து வளம்பெறச் செய்வது தானே? ஆனால், அதுமுடியாத காரியம் என்பது ஆச்சாரியாருக்குமட்டு மல்ல, அனைவருக்கும் தெரிந்த ஒரு திறந்த இரகசியமாகும். எனவேதான், எழுத்து வடிவில்மட்டும் உள்ள சமஸ்கிருதத்தைப், பேச்சு வடிவிலும் எழுத்து வடிவிலும் உள்ள மற்ற மொழிகளோடு சேர்த்து, அதற்கொரு தனிச்சிறப்பை உண்டாக்க லாம் என்றும், அதன்வாயிலாக மனுவின் 'சீர்திருத்தக்' கருத்துக்களை நாட்டில் நடைமுறைக்குக் கொண்டு வரலாமென்றும் ஆச்சாரியார் கருது கிறார்போலும்.

எழுத்துவடிவில்மட்டும் இருக்கும் சமஸ்கிருதமொழி — பேச்சு வழக்கற்று அழிந்துபட்ட சமஸ்கிருதம், எழுத்துவடிவும் பேச்சுவழக்குமுள்ள மொழிகளோடு எவ்வளவுதான் கலந்து உறவாடினாலும், அது, தன் இழந்த மதிப்பை இனி ஒரு போதும் பெறமுடியாது — நிச்சயமாக முடியாதென்பதை ஆச்சாரியார் உணர்ந்திருந்தபோதிலும், மனு தர்மசாஸ்திரத்தையும் பிற சமஸ்கிருத நூல்களையும் படிக்கும்போது, "ஆ! சமஸ்கிருதமே! உன்பெருமை என்ன? இவ்வளவு சிறப்பு படைத்த நீயா இந்நிலை அடைந்தாய்! உன்னைப் படைத்த முன்னோர்களின் வழிவந்த நானா உன்னை இந்நிலையில் பார்த்துக் கொண்டிருப்பது! உன்னைப் பழைய நிலைக்குக்கொண்டுவரும் அதிகாரம் இப்போது எனக்கில்லையாயினும், இதோ எனது அருமை நண்பர் — மாதவமேனன் அவர்கள் இம்மாகாணக்கல்வி அமைச்சராக இருக்கிறார். அவருடைய உதவியினால் உன்னை உன்னுடைய பழையநிலையை அடையும்படி செய்கிறேன்—கவலைப் படாதே" என்று அபயம் அளிக்கிறார் சமஸ்கிருதத்திற்கு.

கல்வி யமைச்சர் மாதவமேனன் அவர்களோ, "நான் இருக்கப் பயமேன்?" என்று கூறுகிறார்.

"தற்பொழுது கல்வித் திட்டத்தில் சமஸ்கிருதம் கற்பதற்குப்போதிய சந்தர்ப்பம் இல்லை. ஒரு வாரத்தில் இரண்டுமணி நேரம்தான் இதற்கு ஒதுக்கப் பட்டுள்ளது. ஆகையால் இந்தக்காலத்தை அதிகரிப்பதற்காக வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளத் திட்டமிட்டிருக்கிறேன். சிலவேலைகள் சமஸ்கிருதம் படித்தவர்களுக்குக் கிடைப்பதில்லை. இதனாலேயே சமஸ்கிருத முன்னேற்றம் தடைப்பட்டுள்ளது. இந்த வழியில், சமஸ்கிருதத்தைப் பின்னடையச் செய்ய யார் காரணமென்று தெரியவில்லை. ஆகையால் இப்படியிருக்கும் சட்டத்தை நான் ரத்து செய்யப் பாடுபடுகிறேன்."

என்று கூறுவதன் வாயிலாகத் தம்மிடம் அடைக்கலம் புகுந்தமாதிரி பேசிய ஆச்சாரியாருக்கு அபயம் கொடுத்து ஆதரித்திருக்கிறார் கல்வி அமைச்சர் மாதவமேனன்.

இவ்வளவு பேசிய மாதவமேனன் அவர்கள், மேலும் ஒரு உண்மையை மறைக்காமல் கூறியிருக்கிறார். அதாவது:-

"மலையாளப் பகுதியில் முன்பு சமஸ்கிருதத்தை எல்லாரும் கற்று வந்தனர். ஆனால், அங்கு இப்போழுது சிலர்தான் படிக்கிறார்கள்"

என்றும் கூறுகிறார். இதற்குக் காரணம் என்ன என்பதைக் கல்வியமைச்சர் ஒருவேளை அறிந்திராவிட்டால், நாம் கூறுகிறோம், சமஸ்கிருதம் போன்ற பிற மொழிகள், தங்கள் மொழிகளோடு கலப்பதால் தங்கள் சொந்தமொழி கெட்டுவிடுகிறதென்பதைத் தெளிவாக உணர்ந்ததால்தான், இப்பொழுது எங்கு பார்த்தாலும் சமஸ்கிருதத்தைக் கற்பதில் எவருக்கும் ஒரு தவிர்க்க முடியாத வெறுப்பு உண்டாகியிருக்கிறதென்றும், அதனாலேயே சமஸ்கிருதத்தை விரும்பிக் கற்றவர்கள் கூட இப்பொழுது அதனை எடுத்தும் பார்ப்பதில்லை என்பதைக் கல்வி அமைச்சர் உணர்வதோடு, அதிகார பலத்தை நம்பிச் சமஸ்கிருதத்தைப் பரப்பும் பணியில் இறங்கினால், அது பயனற்ற காரியமாகவே முடியும் என்பதையும் அறியவேண்டும்.

சமஸ்கிருதத்தைப் பின்னடையச் செய்வதற்கு யார் காரணம் என்று தெரியவில்லை என்பதாகக் கல்வி அமைச்சர் கவலைப்படுகிறார். இதற்குத் தனிப்பட்ட எவரும் காரணமல்ல—காலமாறுதலும் மக்களுக்குத் தங்கள் தங்கள் சொந்தமொழிகளில் ஏற்பட்ட பற்றுதலுமே இதற்குக் காரணமாகும். இந்தக் காரணத்தை அமைச்சர் பதவியால் ஏற்படும் அதிகார பலத்தால் மாற்றிவிட முடியாது. எனவேதான் மாதவமேனனின் மருத்துவமும், ஆச்சாரியாரின் ஆரூடமும் பலிக்காது என்று கூறுகிறோம்.

—✻—

(முன் பக்கத் தொடர்ச்சி)

டிருக்கும், அவர்களுக்குப் பிரச்சாரத்தை நடத்தவும் பணமில்லை யென்று கூறமுடியாது.

பிற கட்சிகளைவிட எல்லாவித வசதிகளும் நிரம்பியது காங்கிரஸ் கட்சி.

காற்று வேகத்தில் தனது பிரச்சாரகர்கள் மூலம், தனது சர்க்காரின் நடவடிக்கையான மதுவிலக்குக் கொள்கையைப் பற்றிப் பேசலாம்; பேசச் செய்ய முடியும்!

எதிர்க்கட்சிகளும், முடிந்தவரையில் மதுவிலக்குத் திட்டத்திற்கு ஒத்துழைப்பை நல்கிய வண்ணம் தான் உள்ளன. எனவே, பிரச்சாரம் அவசியம் என்று கருதப்பட்டால், அதைச் செய்யவும்—செய்து முடிக்கவும் இயலும்!

எனினும், காங்கிரஸ் ஆளவந்தார் பொதுப்பணத்தைக் கொண்டு புது உத்தியோகஸ்தர்களைப் பிரச்சாரகர்களாக நியமிக்கப் போவதாகக் கூறுகின்றனர். இந்த நியமனங்கள் — சேர்க்கப்படுவோரின் தகுதி பொறுத்தே செய்யப்படுமாம். தகுதியென்றால் பேச்சுத் திறனல்ல; காங்கிரசிலிருந்தாரா அவர், என்பது தான்!

பொதுத் தேர்தல் வந்துகொண்டிருக்கிறது, மக்கள் மன்றத்தின் செல்வாக்கைச் செல்லாக் காசாக்கிக் கொண்டுவிட்ட காங்கிரஸ் மீண்டும் தனது பழைய நிலையை எட்டிப் பிடித்தால் தான்—பதவியில் நீடிக்க முடியும்!

(8-ம் பக்கம் பார்க்க)

சண்டை அவசியமா?

[வாணன்.]

"சண்டை அவசியமா?"

வங்கத்திலே ஏற்பட்டுள்ள வகுப்புக் கலவரம் இந்திய உபகண்டத்தின் மக்கள் முன்னிலையில் இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கிறது.

"ஹிந்து கலாசாரம் அழிக்கப்படுகிறது. முஸ்லீம்கள் தங்கள் மத சாம்ராஜ்யத்தை நிலைநாட்டக்கிட்டத்தட்டச் சரிபாதியுள்ள ஹிந்துக்களை கிழக்கு வங்காளத்திலிருந்து விரட்டியடிக்கின்றனர். பல்லாயிரக் கணக்கான இந்துக் குடும்பங்கள் அழிக்கப்பட்டு விட்டன. இந்துக்களுடைய சொத்துக்கள் சூரையாடப்பட்டு விட்டன. ஹிந்துச் சகோதரர்களைக் காப்பாற்றப் பாகிஸ்தானின்கொட்டத்தைஅடக்கவேண்டும். பாகிஸ்தான் மீது படையெடுக்க வேண்டும். கிழக்குவங்காளம் மேற்கு வங்காளத்துடன் மறுபடியும் இணைக்கப்பட வேண்டும். சண்டை அவசியம்!"

இது இந்துமகாசபைத் தலைவர்களின் கர்ஜனை!

'கிழக்கு வங்காளத்தில் இந்து மைனாரிட்டியினர் துன்புறுத்தப் படுகின்றனர். நாட்டை விட்டுத் துரத்தப் படுகின்றனர். இதைப் பார்த்துக் கொண்டு இந்தியக் குடியரசிலுள்ள இந்துக்கள் சும்மாயிருக்க முடியாது. பாகிஸ்தானுக்குப் புத்தி கற்பிக்க வேண்டும். இந்து மைனாரிட்டியினர் காப்பாற்றப்பட வேண்டும். ஆகவே சண்டை அவசியம். பாகிஸ்தானுடன் சண்டை அவசியம்!" இப்படியெல்லாம் ஆர். எஸ். எஸ். தலைவர் கோல்வால்கர் சென்ற இடமெல்லாம் பேசி வருகின்றார்.

காங்கிரஸ் பழைமை விரும்பிகள் பாகிஸ்தானை வெறுப்புக் கண்ணோடு பார்க்கின்றனர்.

இந்த ஆவேசக் கூச்சலில் சோஷயலிஸ்டுக்கட்சியும் சேர்ந்துவிட்டது.

"பாகிஸ்தானில் மைனாரிட்டியினரான ஹிந்துக்களின் பயங்கர நிலைமையை மாற்றி அமைத்து கிழக்கு வங்காளத்தில் அமைதியை உண்டாக்குவதற்கு இந்திய அரசாங்கம் போர் செய்யக் கூடத் தயங்கக் கூடாது." என்ற தீர்மானமொன்றை மார்ச் 3-ம்தேதி சமதர்மக் கட்சியின் காரியக் கமிட்டி நிறைவேற்றியிருக்கிறது.

ஜயப்பிரகாஷ் நாராயணனும் டாக்டர் லோஹியாவும் தாங்கள் பேசும் கூட்டங்களிலெல்லாம் "சண்டை அவசியம்" என்று ஆர்ப்பரிக்கின்றனர்.

ஆனால் இந்தக் கூக்குரல்களுக்கிடையே நாள் தோறும் ஆயிரக் கணக்கான மக்கள் தங்கள் மனைவி மக்களை இழந்து பராரியாக்கப்பட்டு துன்பத்தையே துணைக்கொண்டு மேற்கு வங்காளத்திலிருந்து கிழக்கு வங்காளத்திற்கும், கிழக்கு வங்காளத்திலிருந்து மேற்கு வங்கத்திற்கும் சென்ற வண்ணமிருக்கின்றனர்.

அவர்கள் எந்தமதத்தைச் சார்ந்தவர்களாக இருக்கட்டும். அது பெரிய விஷயமல்ல. மதவெறி மக்களை எந்த அளவுக்குத் தாழ்ந்த நிலைக்குக் கொண்டுவந்து விட்டது என்பதுதான் கவனிக்கப் படவேண்டிய விஷயம்.

இந்திய அரசாங்கத்தின் கணக்குப்படியே கிழக்கு வங்கத்தில் இந்தக் கலகம் ஆரம்பித்த பிறகு இறந்து பட்டவர்களின் எண்ணிக்கை நாலாயிரத்தைத் தாண்டுகிறது. மேற்கு வங்கத்திற்கு அகதிகளாக வந்திருப்பவர்களின் தொகை இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்டது. கிழக்கு வங்கத்தில் அழிக்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பு பத்துக் கோடிக்குமேல். பற்பல ரயில் விபத்துக்கள் ஏற்பட்டு நூற்றுக் கணக்கான உயிர்களுக்குச் சேதம். வங்கம் குழப்பமாகி நிற்கிறது. நாட்டில் உள்ள பல பிரச்னைகள் வங்கப் பிரச்னையினால் இருக்குமிடம் தெரியாமல்போய்விட்டன. பட்ஜெட்விவாதங்களை மக்கள் கவனிக்க நேரம் கூடஇல்லை. அவர்கள் கண்முன் வங்கம் பெரும் பூதமாகக் காட்சியளிக்கிறது! இந்தத்துன்பச் சுழலிலிருந்து தப்ப "சண்டை" என்ற மருந்தைத் தருகிறது இந்திய வகுப்புவாதம். என்ன செய்வது என்று தெரியாமல், துக்கம் ஒரு புறம் தாக்க, ஆத்திரம் ஒரு பக்கம் கிளம்ப, வெறுப்பு என்னும் தீயிலகப்பட்டுக் கொண்டு தத்தளிக்கின்றனர் மக்கள்.

x x x

வங்கப் பிரச்னை இன்றைக்குப் புதிதாக தோன்றியதல்ல. இந்து—முஸ்லீம் போராட்டத்தின் ஒரு அத்தியாயம்தான் வங்கம் தந்த குழப்பம்.

இந்துக்களும் முஸ்லீம்களும் ஒருங்கே வாழ்வது முடியாது என்ற நிலைமை உண்டாக்கப்பட்டு அல்லது ஏற்பட்ட பிறகுதான் இந்திய உபகண்டம் இந்தியா—பாகிஸ்தான் என இருபிரிவுகளாக்கப்பட்டது.

இந்திய உபகண்டத்தின் பெரும்பான்மையினரின் கட்சியான காங்கிரஸ் விஞ்ஞான ரீதியில் அமைக்கப்பட்டதல்ல. ஜாதிமத வேற்றுமைகளைக் கடந்து மனிதனின் பொது நலன்களை முக்கியத்துவமாகக் கொண்ட எந்தக் கொள்கையும் காங்கிரசுக்குக் கிடையாது. ஆகவே அது தன்னையும் அறியாமல் இந்தியாவின் பெரும் பான்மையினரான இந்துக்களின் வசப்பட்டு, உண்மையில் இந்துக்களின் ஆதிக்கப் பீடமாகவே மாற்றப்பட்டுவிட்டது. அதன் பலன்தான் பாகிஸ்தான் பிரிந்த பிறகும் வகுப்புப் பிரச்னை இந்தியாவில் நிற்கவில்லை. பாகிஸ்தான் செய்யும் எந்தக் காரியமும் இந்தியாவுக்கு ஊறு செய்வதாகவே இவர்களுக்குப் பட்டது. பாகிஸ்தான் மறுபடியும் இந்தியாவுடன் இணைக்கப்படவேண்டும், என்ற எண்ணம் பெருவாரியானவர் மனதில் எதிரொலித்தது.

இதேபோல், மதவெறி ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்ட முஸ்லீம்லீக் பாகிஸ்தானை அடைந்த பிறகுகூட இந்திய உபகண்டத்தை சந்தேகக் கண்ணோடுதான் பார்த்தது.

(4-ம் பக்கம் பார்க்க)

மனப்போர்

தில்லை வில்லாளன்

"சேரா......காதல் என்று சொல்கிறார்கள். எனக்கு அடியோடு நம்பிக்கையில்லை என்று சொல்ல முடியாவிட்டாலும் அதற்கு ஏற்றப்பட்டுள்ள சுமைகள் அத்தனையும் தாங்கும் வலிமையில்லை! இலக்கிய வல்லுநர், எழுத்துத் திறம்படைத்தவர்கள் காலத்திற்குக் காலம் சுமையை அதிகமாக்கி விட்டனர்! அதற்கு நானே சாட்சி...நான் ஒரு பெண்ணுடன் பேசுவதுண்டு. அவள் பெயர் லில்லி. அவள் என்னிடங் காதல்கொண்டிருப்பதாகத் தெரிந்துகொண்டேன். எனக்கு அப்படியொன்றும் ஏற்படாவிட்டாலும் அப்படியிருப்பதாக நடித்தேன்...நடிக்கிறேன்"

"ஆனாலும் உயிரான பொருளை மட்டும் மறுக்கமுடியாது......காதலின் வலிமையை யாரும் எதிர்த்து நிற்க முடியாது!"

"காதல் ஒரு அலங்காரப் பொருள்...வெறுஞ்சுவரில் சித்திரம் தீட்டுவது போல"

"நீ சொல்வது விளங்கவில்லையே... நீலா"

"இத்தனை காதல் இலக்கியங்களையும், அன்புக் காவியங்களையும், ஆசை ஏடுகளையும்......அறைகூவியழைத்துக் கேட்கிறேன். கடைசியில் எதில் முடிகிறது? தனியறையில் மங்கிய ஒளியில்...என்றுதானே முடிகிறது! ஆம், அதைத்தான் சொல்கிறேன். உடற்பசியை, மறைக்கவே பயன் படுத்துகிறார்கள், பச்சை அயோக்கியத்தனத்தை மறைக்கப் பசப்பு வார்த்தைகளைப் பயன்படுத்துவதைப் போல, வடித்தெடுத்த வஞ்சகத்தைஒளித்துவைக்கச், சிரிப்புப் புதரைத் தேடுவதைப்போலக் காதல் அகப்பட்டுத் தவிக்கிறது என்கிறேன்"

பாவம்

பாவம்......பஞ்சமா பாதகங்கள் ...பரம்பரை பரம்பரையாகப் பழகி வரும் சொற்கள்! பொருள் புரிகிறதோ, இல்லையோ, நாம் கவலையின்றி, பயன்படுத்திடும் வார்த்தைகள்! ஆம் இதைப்பற்றிச் சிந்தித்தாக வேண்டும். இனியும் விட்டுவிடக்கூடாது, ஏழ்மையைக் கண்டால், இழிவைக் கண்டால், பரிதாபக் குரல் கேட்டால், பஞ்சடைந்த கண்களை, ஒட்டிய உடலைக் கண்டபொழுது, செய்யக் கூடாதது என்று சமூகம் சொன்னவைகளைச் செய்ய நேரும்போது.........பாவம் என்று சொல்கிறோம்!

பாவம்...பாவம், யார் சொல்லி வைத்தார்களோ, முதன் முதலில்! நம்முடைய இரத்தத்தில், நரம்புகளில், எலும்புகளில் ஊறி உறைந்து விட்டது! தகாதது, செய்யக்கூடாதது எல்லாம் பாவம். இக்காலக் கொடுமைகள் இறந்த கால பாவத்திற்குக் கட்டப்பட்ட சமாதிகள்! முன்சென்ம பாவத்தின் விளைவு இன்றைய வாழ்க்கை கோரங்கள்! இப்படி யெல்லாம் சொல்கிறார்கள்!

பாவம் என்ற வார்த்தைக்கு வலுவு தேட எவ்வளவு பாடுபட்டிருக்கிறார்கள்......அதற்காக ஒரு உலகைப் படைத்து நரகம் என்று பெயரிட்டு, அங்கே பயங்கரத் தண்டனையிடங்களை உண்டாக்கி, அதற்கு ஒரு எமராசாவையும் படைத்து, அவனுக்குச் சித்திராபுத்திரன் என்ற கணக்கனையும் ஏற்படுத்தி......சமூக அமைப்பின் அந்த நாள் சிற்பிகள் பட்டபாடு, கொஞ்சமா! எமகிங்கிரர்கள், பாசக்கயிறு, எருமைக்கடா வாகனம்...அத்தோடு போயிற்றா? பாவத்திற்கு எதிரிடையாக புண்ணியம் என்ற வார்த்தையை ஏற்படுத்தி, இதுபோலவே அதற்கும் ஒரு உலகம்...அங்கு ஊர்வசி, அரம்பையர், தங்க ஆசனம், பறக்கும் விமானம்! இப்படியெல்லாம் பாடு பட்டு ஏன் பாவத்திற்கு வலுவு தேடினார்கள் ......இன்னமும் தேடுகிறார்கள்? பாவம், என்பது மறம், புண்ணியம் என்பது அறம்! அறத்தை நிலை நாட்டவே!

அறியாமை வயிற்றிலே, நம்பிக்கை கருவாகத்தோன்றி, அச்சம் என்ற தொட்டிலிலே ஆடி வளர்ந்த குழந்தையே மதம்......அது தந்த விளையாட்டுப் பொம்மைகளே சிலைக் கடவுள்கள்! ஆகவே செய்யக் கூடாதது என்று சட்டமியற்றித் தடுக்க முடியவில்லை. சிவப்புத் தலைப்பாகையைக் காட்டி, விலங்குகளைக் காட்டி, எழு கம்பிக் கோட்டங்களைச் சுட்டி விதிகளை நடைமுறைத் திட்டங்களாக மாற்றுகிறார்கள். ஆனால்அன்று எமனையும், எருமைக்கடாவையும் காட்டவேண்டி வந்துவிட்டது!

பாவத்தைப் பற்றி இப்படி வாதிப்பதினாலேயே பாவத்தைப் பொய்யென்று தூண்டுவதற்காக என்றுஅவசர முடிவிற்கு வந்துவிடக் கூடாது.

கடவுள் என்ற காற்றாடியில் ஒட்டியிருக்கும் வால்போல இந்தப் பாவம் ஏன் இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டாமா? வேண்டாத செயல்களிலும் பாவம் புகுந்து நம்பிக்கை இரக்கமற்றவர்களாக யாற்றுவதைக் கண்டுபிடிக்க வேண்டாமா? தடுக்க வேண்டாமா?

மனிதன் எவ்வளவு பாவங்கள் செய்கிறான்? தெரியாமலா? தெரிந்தே, வேறு வழியில்லாமல்!

பஞ்சமா பாதகங்கள் என்று பிரமாதப் படுத்துகிறார்கள்......ஆனால் அதற்கான காரணங்களை ஆராய வேண்டும். அதுதான் அறிவுடையோர் செயல்!

நீலன் மனதிலே இப்படி எண்ணங்கள் ஆட்டம் போட்டன. இவைகளை அப்படியே சொல்லாவிட்டாலும் குறிப்பாகச் சேரனிடம் சொல்லிக்கொண்டு வந்தான்.

இருளைக் கிழித்துக் கொண்டு புகைவண்டி வெகு வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. பல நிலையங்களை 'அசட்டை' செய்துவிட்டு ஓட்டம் ஓட்டமாக ஓடிக்கொண்டிருந்தது. இரத்தின, வைர வியாபாரி கருப்பண்ணன்செட்டியார் வந்தால் ஆண்டவன் நடராசா துள்ளிக்குதிக்கிறார். குருக்களை ஓடோடி வந்து வரவேற்கச் சொல்கிறார். வண்டியோட்டி வரதன் வந்தால் யார் கவலைப்படுகிறார்கள்! வெளிச்சம் போட்ட பெரிய சந்திப்பு நிலையங்களிலே மட்டுமே வண்டி நின்றது. மற்றவை வண்டியோட்டி வரதனின் நிலையையே பெற்றன!

அவர்கள் உட்கார்ந்திருந்த வண்டிக்குச் சீட்டுச் சோதனையாளன் வந்தான். அவர்களுக்குப் பின்புறம் ஒரு குட்டிக் கலகம்.........ஒரு குழந்தைக்கு 'டிக்கட்' இல்லையென்பதற்காக மிகவும் கோபித்துக் கொண்டான். அந்தக் கலவரத்தைக் காதால் கேட்ட எங்கள் பக்கத்து ஆசாமி திருதிருவென விழித்தான். அவன் மனம் ஓடும் புகைவண்டியைவிட வேகமாக ஓடிக்கொண்டிருந்தது போலும்......! அவன் நழுவ இடம் பார்த்தான் அவன் ஏன் அப்படித் திருட்டுத்தனமாக வரவேண்டும்? இப்பொழுது இப்படி விழிக்கவேண்டும்? அவனுக்குத்தெரியாதா பொய், பஞ்சமாபாதகங்களில் ஒன்று என்று. அவன் பெற்றோர் சொல்லித்தரவில்லையா? தெரிந்தே இப்படிச் செய்கிறானா?......அறியாமல் செய்த குற்றம் பாவமாகாது என்று ஏசு சொல்லியிருக்கிறாராம். ஆனால் அறிந்தே, வேண்டுமென்றே செய்கிற குற்றத்திற்கு என்ன தண்டனை? இப்படிக் கேட்பதைக் காட்டிலும் அப்படிக் குற்றம் செய்யவேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது, அதற்குரிய காரணங்கள், காரணங்களால் ஏற்பட்ட சூழ்நிலை என்னவென்று கேட்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

'டிக்கட்' சோதனையாளன் எங்கள் பக்கம் வந்தான். அவன் யார் என்று நினைக்கிறீர்கள்? முகுந்தன்......... எங்கள் இருவருக்குமே நெருங்கிய தோழனாக இருந்த முகுந்தனே! அவன் கல்லூரியில் இடைநிலை வகுப்புவரை படித்துவிட்டுத் தன் படிப்புப் பயணத்தை நிறுத்திக் கொண்டான். அவன் அவர்களைப் பார்த்ததும் ஆச்சரியமாக ஆர்வம் ஒழுக, ஒழுகப் பார்த்தான்.

“நீலா, சேரா......எங்கே புறப்பட்டீர்கள்? இதை முடித்துவிட்டு வருகிறேன்!” என்றான்.

அவன் தொடர்ந்து எல்லோரிடமும 'டிக்கட்' இருக்கிறதா என்று பார்த்தான். எங்கள் பக்கத்து ஆசாமியிடம் வந்ததும் அவன் “பேந்த பேந்த” விழித்தான். பிறகு அடுத்தவண்டியில் நண்பர் ஒருவரிடம் இருக்கிறதென்று புளுகி நிலைமையைச் சமாளிக்கப் பெரிதும் பாடுபட்டான். முகுந்தன் அவனை நம்பவே இல்லை. நீலன் மனதில் ஏதோ வேதனைபுகுந்துகொண்டது அந்தப் பரிதாபத்திற்குரியவனை எப்படியாவது தப்புவிக்க வேண்டும் என்ற ஆசை பிறந்துவிட்டது......அவன் என்ன நிலைமையிலுள்ளவனோ, என்ன காரணத்தினால் “டிக்கட்” வாங்கமுடியவில்லையோ, அவன் எந்த அவசரத்தைக்கருதிப் போகிறானோ: என்று எண்ணினான். நீலன் அந்த ஆசாமி சொல்வது உண்மை என்று கூறி முகுந்தனை நம்பச்செய்தான்! அந்த ஆள் நீலனை நன்றியறிதலோடு பார்த்தான். அவன் கண்களில் நீர் வடிந்தது! தந்தை இறந்துவிட்டார் என்று சேதி கிடைத்தும், அனுப்ப மறுத்த முதலாளியிடமிருந்து ஓடுகிறான் என்பது அவன் கூறிய பிறகல்லவா தெரிந்தது அவர்களுக்கு... பிறகு அவனைச் சமாதானப்படுத்தினர்!

“என்ன முகுந்தா...இப்பொழுது எங்கு இருக்கிறாய்?”

“ஓடும் வண்டியில்.....;”

“அட அதுதான் தெரிகிறதே... நிலையான தங்குமிடம்!”

“திருச்சி, இப்படி நாடோடிபோல ஓடவேண்டும் இரவு பகலென்று பாராமல்!”

இப்படிப் பேசினர்.

முகுந்தன் அவர்களைப்பற்றிவிசாரித்தான். அவர்கள் எம். ஏ. வகுப்பின் இறுதிஆண்டு என்று தெரிந்து மகிழ்ச்சிகொண்டான். அவர்களைப் பாராட்டினான். கல்வியில் முன்னேறிடவேண்டும் என்று அறிவுரைகூறினான். பிறகு அவர்கள் திருச்சிக்குப் போகிறார்கள் என்று தெரிந்து கொண்டு மிகவும் ஆனந்தப்பட்டான். இரண்டுநாள் ஓய்வுடன் அவன் செல்கிறான். தனது பழைய நண்பர்களைத் தன் அறையில் தங்கச் செய்து விருந்து செய்து அனுப்பத் திட்டமிட்டான்.

“முகுந்தா...... நீ எந்தக் கட்சியப்பா?”

“என்னப்பா, திடீர் குண்டு...... அதைப்பற்றி இப்பொழுதென்ன?',

“சொல்லேன்......முதலில்!”

“எனக்கு எந்தக் கட்சியும் கிடையாது. கொள்கைகள் உண்டு...... கொள்கையைக் கடைபிடிப்பேன். ஆனால் கட்சிகளில் சேர்ந்து கூவுவதும், ஆர்ப்பாட்டம் செய்வதிலும் எனக்கு விருப்பமிருப்பதில்லை.”

“சரி, உனக்குப் பாவத்தில் நம்பிக்கை உண்டா?”

நீலனை சேரன் இடைமறித்தான்.

“முகுந்தா, நீலன்தான்எப்பொழுதும் தத்துவவிளக்கம் அனுபவ ஆராய்ச்சி.....என்று ஆரம்பித்து நமது வாயைப் பிடுங்குவதில் கைதேர்ந்த கள்வன் என்று உனக்குத் தெரியாதா?”

‘சேரனுக்கு இப்பொழுது ஒரு வகை வியாதி.....சேலவிழி நோய் ...அவனுக்கு நம்பேச்சுப்பிடிக்காது! நீ சொல்லப்பா!”

அவர்கள் ஆராய்ச்சியிலிறங்கிவிட்டார்கள். தகாதகாரியங்களைச் செய்யாமல், தடுக்க இந்த ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்களாம்பெரியவர்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
5, Tirukkachinambi Street, Kancheepuram.